மகிழ்ச்சி



நதன-புரட்டாசி

பீடி சக்ரவர்த்தி த.பீ.சொக்கலால்ராம்சேட் பீடி

★ உலகத்தில் மிகப் பிரசித்தி பெற்றதும் ★

★ "பீடிச் சக்கரவர்த்தி" என்று கவர்ண்மெண்ட் பட்டம் கிடைக்கப்பெற்றதும் ★

★ தங்கமெடல் பரிசு பெற்றதும் ★

★ சோம்பலைப் போக்கி சுறுசுறுப்பு உண்டாக்குவதும் ★

★ இந்தியா, சிலோன், மலேயா முதலிய ஜலப் பிரதேச நாடுகளில் பிரக்கியாதி பெற்றதும் ★

★ தினமும் ஆயிரக்கணக்கான மக்களுக்கு தொழில் கொடுப்பதும் ★

★ காரம், குணம், மணம் நிறைந்ததும் ★

★ எங்கும் எப்பொழுதும் கிடைப்பதும் ★

சொக்கலால் ராம்சேட் பீடியே!

புரோப்ரைட்டர்:

T. P. S. ஹரிராம் சேட்,

த. பீ. சொக்கலால் ராம்சேட் பீடித் தொழிற்சாலை,

முக்கூடல் P.O. (திருநெல்வேலி ஜில்லா)

PUBLIC LI

விருதுநகர்

ஸ்ரீ ராதாவில்

பிரேம்நாத், திலீப்குமார்,
நிம்மி, நாதிரா நடித்த

ஆன்

இயற்கை வர்ணப் படம்.

இப்பொழுது
நடைபெறுகிறது

வருகிறது:- "பராசக்தி"

விருதுநகர்

சென்ட்ரலில்

S. A. நடராஜன்,
மாதுரிதேவி நடித்த

ஜமீன்தார்

3-வது வாரமாக
நடைபெறுகிறது.

வருகிறது:- மார்டன் தியேட்டர்ஸ்
"வளையாபதி"

[illegible] 1955

சீர்திருத்த மாத இதழ்

ஆசிரியர்: நா. சதானந்தம்
விருதுநகர்.

தி. ஆ. 1983—புரட்டாசி 1.
ஆண்டு 4] 16-9-52 [மாதம் 4

பொருளடக்கம்

ஆங்கிலம்	3
ரேடியோவில் சினிமா ரிக்கார்டு	4
இது நிஜமா?—வாசகன்	5
சந்தேகம் ஒழிக—ஜாலி	6
அறிவுப்பூங்கா	8
முள்—தொடர்கதை —ஏ. வி. பி. ஆசைத்தம்பி	9
இந்தி ஒழிப்புக் கிளர்ச்சி நேயர் கருத்து	14
காதற்கடல்—தொடர்கதை விருதை மகிழ்நன்	17
தெறித்த முத்துக்கள்	23
கருகியமலர்—சிரேகி	25
மழையே நீ வருவாய் —இ. ப. இ. பெருமாள்	31
ஆளும் தலைவரே இதற்குப் பதில் கூறட்டும் —என். எஸ். ராமன்	32
சரிந்த குடும்பம்—குமணன்	34
இந்நாட்டு மன்னன்—பாரி	40
ஆன்—பட விமர்சனம் 'சண்டிநாத்'	42
ஞா. சோ. போட்டி 6	45
சினிமா செய்திகள்—பெல்	46

கதைகளில் வரும் பெயர்கள்
கற்பனையே.

ஏழை மாணவர் ஸ்காலர்ஷிப்
நிதிக்காக

கலைவாணர் திரு.

N. S. கிருஷ்ணன்

& பார்ட்டியார் உதவும்

நான்கண்ட ரஷ்யா,
கிந்தனார்,
காந்திமகான் சரித்திரம்

வில்லுப்பாட்டு

28-9-52 ஞாயிற்றுக்கிழமை
இரவு 7-30 மணிக்கு

விருதுநகர்
க்ஷத்திரிய வித்தியாசாலை
காம்பவுண்டில் நடைபெறும்.

அன்பர்கள் தாராளமாக
நன்கொடை கொடுத்து உதவ
வேண்டுகிறோம்

ஏழை மாணவர் ஸ்காலர்ஷிப்
நிதிக் கமிட்டியார், விருதுநகர்.

விருதுநகர்

நியூ முத்துவில்

N. T. ராமராவ்,
S. V. ரங்காராவ்,
G. வரலக்ஷ்மி,
சாவித்திரி நடித்த

விஜயாவின்

கல்யாணம் பண்ணிப்பார்

2-வது வாரமாக
நடைபெறுகிறது.

வருகிறது:- எனெஸ்கேயின்
"பணம்" (தமிழ்.)

ஆங்கிலம்

இன்று உலகத்தில் பெரும்பான்மை மக்களால் பேசப்படுவது ஆங்கிலம். ஆங்கிலம் தெரிந்தவன் உலகில் எங்கு சென்றாலும் அதிக சிரமமின்றி தன் காரியத்தை முடித்துத் திரும்பிவிடலாம். அதுமட்டுமல்ல, மக்களுக்கு இன்றியமையாத ரஸாயனப் பெயர்களும், விஞ்ஞான அறிவியல் நூல்களும் பெரும்பாலானவை ஆங்கிலத்தில்தான் அமைந்துள்ளன. சுருங்கக் கூறுமிடத்து உலகுடன் ஒத்து முன்னேற வேண்டுமானால், அவசியம் ஆங்கிலம் தெரிந்திருக்கவேண்டும்.

சுதந்திரம் பெற்று ஆங்கிலேயரைக் கப்பலேற்றிய வேகத்தில், அவர்களது மொழிமீதும் சாடி விழுந்து பள்ளிகளில் குதறிய தின் காரணமாக, கடந்தமூன்று ஆண்டுகளில் காலேஜ்களில் சேர்ந்த மாணவர்களின்தரம் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது. காலேஜில் பாடங்கள் பூராவும் ஆங்கிலம். இவர்களுக்குச் சரியாகப்புரிவதில்லை. அஸ்திவாரம் சரியில்லாத காரணத்தால்தான், அண்மை வருடங்களில் அடிக்கடி கேள்வித்தாள்கள் அம்பலத்திற்கு வந்தது என்றுகூடக் கூறலாம்.

இந்த உண்மைகளை பலகாலமாக பல நிபுணர்கள் கலந்தாலோசித்ததின் முடிவாக, இப்பொழுது சென்னை சர்க்கார் ஒரு புதிய திட்டம் தயாரித்து வெளியிட்டுள்ளார்கள். இத் திட்டத்தின் முக்கிய அம்சம் என்னவென்றால், முதல் மூன்றுபாரங்களில் சுமார் 2000 அசல் ஆங்கில வார்த்தைகளையும், அவற்றைத் தழுவிய சொற்களையும் முறைப்படி இலக்கணத்துடன் பேசவும், எழுதவும் மாணவர்களைத் தகுதிபெறச் செய்வதாகும்.

மேல்வகுப்புகளில் விரிவாக்கப்படும் இவை. முடிவு என்னமோ நல்லதுதான். ஆனால் அதற்குகந்தபடி புத்தகங்கள் தயார்செய்வதை தனிப்பட்டவர்களிடம் விடுவதைவிட அரசாங்கமே ஈடுபட்டால் மிகவும் நன்றாக இருக்கும் என்று கருதுகிறோம். அத்துடன் ஆங்கிலம் இருந்த இடத்தை இன்னும் 15 ஆண்டுகளில் இந்தி வந்து ஆட்கொள்ளும் என்ற பீதிக்கு இடமின்றி, உலக நாடுகளுடன் சரி நிகர் சமானமாக வாழ என்றென்றும் ஆங்கிலம் போதிக்கப்படும் என்ற முடிவையும் மேற்கொள்ளவேண்டுகிறோம்.

ரேடியோவில் சினிமா ரிக்கார்டு!

[புதுப்பாலன், தென்னூர்]

வானொலியில் சினிமாச் சங்கிதம் நீக்கப்படுவதற்கு சர்க்கார் கூறும்காரணம்இரண்டு. ஒன்று அவை சங்கித ஞானம் குறைந்த ஆபாசம் நிறைந்தவை. மற்றொன்று அவை சினிமாத் தொழிலுக்கு விளம்பரம் போன்றது என்பதாகும். இன்றையசினிமா பாட்டுகள் பொதுமக்களால் விரும்பப்படுகிறது என்பது எவரும் அறிந்ததே. அவைகளை சங்கீத ஞானம் உள்ளவைகளாக மாற்றும்படி ஏன் தணிக்கைப் போர்டார்செய்யக்கூடாது. அவ்வதிகாரம் அதற்கில்லையென்றார் கனம் மந்திரி கேஸ்கர். ஏன் அவ்வதிகாரம் அதற்குக் கொடுத்தால் தடுப்பார் யார்? இன்று சர்க்கார் பரிசுபெறும் சினிமாப் படங்கள் மட்டரகப் பாட்டைக் கொண்டவை என்பது வெள்ளிடைமலை. சர்க்கார்கூட கவர்ச்சியை விரும்பும்போது மக்கள் அதை விரும்புவதில் ஆச்சரியம் இல்லையே. இப்பாடல்கள் ஆபாசம்நிறைந்தவை என்பதும் அர்த்தமற்றதே. இதை ஆபாசம் என்போர் முதலில் இவைதணிக்கைப் போர்டின் உத்தரவு பெற்றது என்பதை மறக்கக் கூடாது. இவை ஆபாசம் என்றால் இதை அனுமதித்த போர்டு அதன் பிறப்பிடம் என்றுதானே அர்த்தம். பின் போர்டை அமைத்த சர்க்கார் ....? அடுத்தது சினிமா விளம்பரம் என்பது ஜில்லா போர்டு, தா கா கமிட்டி முதலியன விளம்பரத்துக்கு சினிமா ரிக்கார்டுகள் வாங்கி வைத்திருக்கின்றனவே அதுஏன்? சினிமா விளம்பரத்துக்கா? இல்லையே. கல்வியில்குறைந்த கிராமமக்களை தம் கொள்கையைக்கூற முதலில் கவர்வதற்கே. அதுபோலவே ரேடியோவில் கூறப்படும் கிராம நிகழ்ச்சி, அயல்நாட்டுச் செய்தி முதலியவைகளை மக்களகேட்கும்படி செய்ய இந்த கவர்ச்சியுள்ள சினிமாப் பாட்டுகள் மிகமிகத் தேவை. ஆகவே இக்கொள்கை மக்களால் பெரிதும் விரும்பப்படாததே. இது ரேடியோசெட்டின்விற்பனையை குறைத்தாலும் கூட ஆச்சரியப்படுவதற்கில்லை. ஆகவே கிராம மக்களின் சௌகரியத்தைக் கவனித்து ஓரளவு குறைத்தாலும் நடுப்பகல் ½மணி நேர ரிக்கார்டும், மாலை செய்திக்கப்புறம் உள்ளதும் கட்டாயம் எடுக்கப்படக்கூடாது என்பதே என் அபிப்பிராயம். ஏன் எல்லோருடையதும்தான்.

சினிமா வேண்டுமா? வேண்டாமா? ஏன்?

கார்டில் எழுதி அனுப்புங்கள்.

இது நிஜமா?

[வாகன்]

காதல்

காதல்என்பது பாலைவன ஒட்டகம்—சிங்காசனமல்ல.

—ஒரு கயஸ்

வசீகரம்

காதல் வாழ்க்கை சித்திர வேலைப்பாடுள்ள மேஜை, நாற்காலிகள்போல வசீகரமானது; ஆனால், தொந்தரவுகள் தரும் மூட்டைப் பூச்சிகள் வசதியாக வாழ்ந்து அதிகரிக்கும்.

—ஒரு தச்சன்

அன்பு

எவ்வளவுதான் இறைநீர் வார்த்தாலும மழைக்கீடாகுமா? செடி கொடிகள மழைக்கு ஏங்கி வாடிக்கொண்டுதான் இருக்கும். அதுபோல, என்ன செல்லமாக வளர்க்கப்பட்டவளானாலும் கணவனின் அன்பைப் பெற வேண்டியவள் பெண்.

—ஒரு விவசாயி

ஆதாரம்

வளையல்கள் அணிந்த கைகளால் வீரவாள் ஏந்தப்படுகிறது; ஆனல், நீதிமன்றத்தில் ஜீவனும்சம் கோருகிறவர்களெல்லாம் பெண்கள்—மெலியோருக்கு வலியோர் ஆதரவு தரவேண்டும், கொடிவளர ஆதாரம் தேவை போல்

—ஒரு வளையல் வியாபாரி

கதை அனுப்புவோர்க்கு

கைவசம் நிறையக் கதைகள் இருப்பதால் தற்சமயம் யாரும் கதைகள் அனுப்பவேண்டாம்.

ஆசிரியர்.

சலுகை

குற்றவாளிக்குத்தான் சந்தேகத்தின் சலுகை காட்டப்படுகிறது இயற்கையே பெண் விரோதியாக அமைந்துவிட்டபடியால் சட்டங்கள் பெண்களுக்குச் சாதகமாக அமைக்கப்பட்டிருக்கவேண்டும்.

—ஒரு நீதிபதி

சிறந்தது

பெண்—பாடம்; ஆண்—படிக்கிறவன்; சம்சார சாகரம் கல்லூரி. ஆராய்ச்சியைக்காட்டிலும் அனுபவத்தின் அறிவே சிறந்தது.

—ஒரு பி. எஸ்சி.

கடமை

குற்றங்களினல் நஷ்டங்களும் கஷ்டங்களும்விளையாதபடி முன் கூட்டியே தடுக்கவேண்டியது போலீஸ் கடமை. காதலினுல் கலக்கமும் கவலையும் ஏற்படாதபடி கலியாணத்தை கட்டாயப்படுத்தி விடவேண்டியது பெற்றோர்கள் கடமை.

—ஒரு மாஜி போலீஸ் அதிகாரி

சந்தேகம் ஒழிக!

"ஜாலி"

குட்டி பத்திரிகைகளை ஆரம்பித்து குறுகிய நாளில் விற்பனையாளர்களின் முன்பணத்தைக் கொள்ளையிட்டுச் செல்லும் குள்ளநரி கொள்கையாளர்கள் வளர்ந்துவருவதைத் தடுக்க என்ன செய்யவேண்டும்?

அன்பானந்தன்
—ஹங்குரன்கெற—இலங்கை

கவர்ண்மெண்டார் பத்திரிகை நடத்த அனுமதி அளிக்கும்போது சுமார் இரண்டாண்டு அல்லது ஒரு குறிப்பிட்ட காலம்வரை முன்பணம் கட்டவேண்டுமென்று சட்டம் செய்திருந்தால் ஏமாற்றப்படுகிறவர்களுக்கு அதிலிருந்து ஈடு செய்யலாம்.

தமிழ் நாட்டு ஸ்டேஷன்களில் ஹிந்தியில் எழுதியிருப்பதுபோல் வடநாட்டில் தமிழில் எழுதியிருக்கிறார்களா?

—டி. செல்வராஜ், தூத்துக்குடி.

இல்லை.

தமிழ்நாட்டில் தலைசிறந்த எழுத்தாளர்கள் யார்? சிறந்த பேச்சாளர்கள் யார்?

—ஆர். செல்லத்துரை, மதுரை.

இன்று இரண்டு துறையிலும் சிறந்தவர்கள் சி.என். அண்ணாதுரை ம. பொ. சிவஞானம், கி. ஆ. பெ. விசுவநாதம், ராஜாஜீ; ஈ.வே. ராமசாமி, ரா.பி.சேதுப்பிள்ளை. எழுத்தில்மட்டும் மு. வரதராசன், கல்கி. பேச்சில் மட்டும் நெடுஞ்செழியன், ப. ஜீவானந்தம்.

விஞ்ஞானத்திற்கும், அஞ்ஞானத்திற்குமுள்ள வித்தியாசம் என்ன?

ஆகாயவிமானம் பறப்பது விஞ்ஞானம். நாரதர் ககன மார்க்கமாகச் சென்றார் என்பது அஞ்ஞானம். ரேடியோ, டெலிவிஷன் செய்து உபயோகிப்பது விஞ்ஞானம். பிள்ளையார் செய்து முயற்சியின்றி வரம் கேட்டுத் திரிவது அஞ்ஞானம்.

நாகரீகம் என்றால் என்ன?

மூளையைப் பயன்படுத்தி, அறிவை விருத்தி செய்துகொள்வது நாகரீகம்.

நமது குணங்கள் பரம்பரையா? செயற்கை சூழ்வா?

—ச. வீ. ராமகிருஷ்ணன்,
அழகாபுரி.

பெரும்பாலும் சூழ்நிலையை ஒட்டியே ஒருவரின் குணம் அமையும்.

அன்புச் சுடரை வைராக்கியம் என்னும் தூண்டுகோலால் அணையாமல் செய்ய இயலுமா? அல்லது அறிவுத் தூண்டுகோல் வேண்டுமா?

அன்பும் அறிவும் இணைந்துவிட்டால், இவ்வையகத்தில் ஆகாதது ஒன்றுமில்லை.

ராஜாஜீ சினிமாபார்க்கக்கூடாது என்று சொல்லுகிறாரே, அவர் எண்ணம் நிறைவேறுமா?

—குலசைகம்சா, கொழும்பு.

உணவுப் பஞ்சத்தை ஒழிக்க, குழந்தை உற்பத்தியைக் குறைக்க வேண்டும் என்று அறிஞர்கள் கூறுகிறார்கள் முடிகிறதா? மக்கள் செவி

சாய்க்கிறார்களா? இதேமுடிவுதான் இதற்கும்.

ஒரு வாலிபன் ஒரு பெண்ணைக் காதலித்து கலியாணம் செய்வது நல்லதா? அல்லது பெற்றோர்கள் பேசிமுடிக்கும் பெண்ணைக் கலியாணம் செய்வது நல்லதா?

பரிசுத்தமாக, காதலில் ஈடுபட்டு, ஒருவரையொருவர் நன்கு தெரிந்து மணப்பது சிறந்ததுதான். மற்றப்படி பெற்றோர் சொல் கேட்பதில் தப்பில்லை.

சென்னை அரசாங்கம் ரேஷனை நீக்கியதினால் மக்களுக்கு நிம்மதி ஏற்பட்டுவிட்டதா?

மக்களுக்கு நிம்மதியோ, இல்லையோ? ரேஷன் கார்டுகளுக்கும், அரசாங்கத்திற்கும் சற்று நிம்மதி ஏற்பட்டுள்ளது.

படிப்பும் அழகுமில்லாத பட்டிக்காட்டுப்பெண்; ஆனால் களங்கமற்ற மனமுள்ளவள். முறைப்பெண்ணும் கூட. மிக்கஅழகும், படிப்பும் உள்ளவள் பட்டணத்தில் வசிப்பவள். ஆனால் வஞ்சக மனமுள்ளவள். இவர்களில் யாரை மணப்பது?

என். ராமசாமி,
உடுமலைப்பேட்டை.

முன்னவள் ஆடை; பின்னவள் அரவம். மானம் காப்பது ஆடை; மரணம் உண்டாக்குவது அரவம். இனி உங்கள் இஷ்டம்.

குடும்ப நலத்திற்காகக் காதலைத் தியாகம் செய்வதா? அல்லது சுய நலத்திற்காகக் காதலை ஆதரிப்பதா? இதில் எது சரி?

இருவர் கருத்தொருமித்து

அட்டைப்படம்:
என். டி. ராமராவ்,
ஜி. வரலக்ஷ்மி.

ஆதரவுபடுவது காதல். குடும்ப நலம் கருதின் கல்யாணத்தையே தியாகம் செய்தால்தான் ஒருவேளை காதல் மங்கையின் கண்ணீரைத் துடைக்க முடியும். குடும்பத்தில் இவ்வளவு அக்கறைகொண்டவர்கள் முதலிலேயே இதனைச்சிந்தித்திருக்க வேண்டும்.

பெண்களைக் கண்டால் பேய்களைப்போல் பின்தொடர்ந்து செல்லும் காமாந்தகாரர்களை என்னவென்று அழைப்பது?

சமுகஎலும்புருக்கிகளை எப்படி வேண்டுமென்றாலும் அழையுங்கள்.

நம் இந்திய நாடு மற்ற நாடுகளை விட எல்லாத் துறைகளிலும் கீழாக இருப்பதின் காரணமென்ன?
—எஸ் எஸ் லூர்துசாமி, குடந்தை.

நீண்டகாலம் அன்னிய ஆட்சியில் இருந்த மயக்கமும், சுதந்திரம் வந்தபின்னும் அதை சரியாக உணராத மக்களும்தான் காரணம்.

இருளில் ஒளி

ஆசிரியர்: விருதை ந. இராமசாமி
வெளியிட்டோர்:
கலைஞன் பதிப்பகம், விருதுநகர்.
பககங்கள் 38—விலை அணா 8.

நெசவுத் தொழிலாளர்களின் இன்றைய அவல நிலையை பிரதிபலிக்கும் முறையில் நன்கு அமைந்திருக்கும் இக்கதையில் அச்சுப்பிழைகள் மலிந்துகாணப் படுகின்றன.

* * * *

கம்யூனிஸ்டு பிள்ளையார்

ஆசிரியர்: இரா. சு. தங்கப்பழம்
செல்வம் பதிப்பகம்,
வெங்கலக்கடைத்தெரு, மதுரை.
பக்கங்கள் 40—விலை அணா 8.

இப்புத்தகத்தில் கம்யூனிஸ்டு பிள்ளையார், இருதுருவம், விவாக ரத்து ஆகியமூன்று கதைகள் உள்ளன. திருதிருப்பும் விறுவிறுப்பும் நிறைந்த இக்கதைகளில் 'இருதுருவம்' என்ற கதை மிகவும் பிரமாதமாக அமைந்துள்ளது. இதில் பிறர் மனைவியர் மீது வலைவீசித் திரியும் காமுகர்களுக்கு புதுமுறையில் பாடம் கற்பிக்கிறார் அற்புதமாக ஆசிரியர்.

கிடைக்கப்பெற்றோம்

சினிமா ரசிகமணிகள்

இணைத்தவர்:
இராஜபாளையம் "சிவம்"
பிரசுரம்: ராம் பதிப்பகம்,
தென்காசி.
பக்கங்கள் 15—விலை அணா 3

* * * *

தமிழ் இளைஞன்

தமிழ் இலக்கிய மாதப் பத்திரிகை
ஆசிரியர்: யுதிஷ்டிரன்
திருப்பாதிரிப்புலியூர்.
விலை அணா 2
ஆண்டுச் சந்தா ரூ. 1—8—0

* * * *

மறுமலர்ச்சி

அரசியல் சமுதாய வார இதழ்
பிரதம ஆசிரியர்: பாஷா
ஆசிரியர்: எ. எம். யூசுப்
பாலக்கரை—திருச்சி.
விலை அணா $2\frac{1}{2}$
வருடச் சந்தா ரூ. 7—0—0

* * * *

இடிமுழக்கம்

மாதம இருமுறை இதழ்
ஆசிரியர்: முசு. மீரா,
அறந்தாங்கி.
விலை அணா 2
ஆண்டுச் சந்தா ரூ. 3—8—0

ஜானகி:

முள் குத்திவிட்டால் அதை உடனே பிடுங்கி எறியத்தான் எல்லோரும் நினைக்கிறார்கள்.

காதல்முள் கருத்திலேகுத்தும் போதும் அதேநிலைதான். பெற்றோருக்கு தெரிந்தால்? விபரீதமாக ஏதும் நடந்துவிட்டால்? தவறான பாதையில் செல்வதா? இப்படி ஏதேதோ நினைத்து, மனதிலே ஏற்பட்ட காதல் சபல எண்ணத்தை அகற்றிவிடத்தான் அனைவரும் முயற்சிக்கின்றனர், முதலில்.

இதற்கு நான் மட்டும் விதிவிலக்கா? அடுத்த வீட்டு ராமரைக் கண்டதுமுதல் என் உள்ளத்திலே ஏதோ ஒருமுள் குத்தியதுபோலதான் இருந்தது.

அவர் நிலையையும் என் நிலையையும் நினைத்துப் பார்க்கும்போது எனக்குப் பயமாகவே இருந்தது. நான் ஓர் ஏழைக் கிழவியின்பேத்தி. ஆனால் அவர்?

அவரும் தாய் தந்தையற்ற அனாதை என்றாலும் பெரிய பணக்கார வீட்டுப் பிள்ளை.

ஏழை, பணக்கார வீட்டுப் பிள்ளையை காதலிக்கமுடியுமா? காதலித்தாலும் அந்தக் காதல் நிறைவேறுமா? இது ஏன் அந்தப் புயலுக்குத் தெரியாமல் போயிற்று? அன்று மாத்திரம் அந்தப்புயல் அடிக்காமல் இருந்தால் அவரை நான் பார்த்திருப்பேனா?

பாழாய்ப்போனபுயல். அன்று நான் துவைத்து உலரப் போட்டிருந்த 'சில்க்'சேலையை அடுத்த வீட்டு தோட்டத்திலே கொண்டு போய் போட்டுவிட்டது பணக்காரவீட்டுப் பெண்கள் கிழிந்த சேலையைக்கூட தைத்து உடுத்துகிறார்கள்! உடுத்த முடியாத நிலையில் இருந்தால்கூட ஏழை எளியவர்களுக்கு இனாம்கொடுத்துவிடுவதில்லை. நாளை பிறக்கிற குழந்தைகளுக்கு, கீழே விரிக்கவாவது பயன்படுமே என்று

பழைய துணி மூட்டையோடு கிழிந்த சேலையைப் பத்திரப்படுத்தி, பதுக்கி வைக்கிறார்கள். பரம ஏழையாகிய நான் பாட்டி கஷ்டப்பட்டு நாற்பதுரூபாயில் வாங்கிக் கொடுத்த 'பெங்கால் சில்க்' சேலையை இழக்க மனம் வருமா?

தோட்டக்காரக் கிழவர் துணியோடு என் சேலையை எடுக்கச் சென்றேன். அப்போது அவர் ஆம், மன்மதன் என்று சொல்வார்களே, அவர் நின்றுகொண்டிருந்தார்.

மன்மதன் கையிலே வில்லும் அம்பும் இருக்குமாம்! அவன் யார்மீதாவது கணைதொடுத்தால் காதல்பிறந்துவிடுமாம்! இப்படி யார்யாரோ கதைசொல்லி இருக்கிறார்கள்.

தோட்டத்திலே நான் பார்த்த ராமன் இரு கைகளிலே ஏந்தி இருந்த என் சேலை, மன்மதன் வில்லையும் அம்பையும் பிடித்திருப்பதுபோல் தோன்றியது. தோட்டக்கார கிழவர் அவரிடம் சென்று, "எஜமான்! இந்தச் சேலை அடுத்தவீட்டு ஜானகியினுடையதாம். எடுத்துப்போக வந்திருக்கிறாள். புயல்செய்த வேலை, எஜமான்!" என்று சொன்னார்.

புயல் அடங்கி எவ்வளவோ நேரமாகிவிட்டது. ஆனால் என் மனதிலே அப்போதுதான் புயலடித்தது. அவர் என்னையே பார்த்துக்கொண்டு இருந்தார். அதிக ஒளியை பார்த்துக்கொண்டே இருக்க முடியுமா? நான் அவரைப் பார்க்க வெட்கப்பட்டு குனிந்துகொண்டேன்.

"இந்தாம்மா, சேலை!" என்று சொல்லி தோட்டக்கார கிழவர் சேலையைஎன்னிடம்கொடுத்தார். ஒரே ஓட்டமாக வீட்டுக்கு வந்தேன். எதையோ பறிகொடுத்ததுபோன்றஉணர்ச்சி இருந்தது. இழந்த சேலையைத்தான் எடுத்து வந்துவிட்டேனே, பின் எதை விட்டு வந்துவிட்டேன்? இது எனக்கு சரியாகவே புரியவில்லை. என் மனது அமைதிகெட்டிருந்தது.

சேலையை மடிக்க எடுத்தேன். 'பொத்'என்று சப்தம்கேட்டது. கீழே பார்த்தேன் 'மணிபர்ஸ்' கிடந்தது. எனக்கு ஒரே திகிலாயிருந்தது.

மணிபர்ஸ் எப்படி வந்தது? வேண்டுமென்றே சேலையில்வைத்துக் கொடுத்துவிட்டாரா? அல்லது தோட்டத்தில் கீழேகிடந்த சேலையை குனிந்து எடுக்கும் போதுவிழுந்துவிட்டதா? இதை வைத்துக்கொண்டு என்ன செய்வது? திருப்பி கொடுப்பதென்றால் எப்படிக்கொடுப்பது? வீட்டில் பாட்டியிடம் கொடுத்துக் கொடுக்கச் சொன்னால் பாட்டி என்ன நினைப்பாள்?

இப்படி ஏதேதோ நினைத்தேன். மணிபர்சை திறந்து பார்த்தேன். ஆகா! சிரித்தமுகத்தோடு, சிருங்கார பார்வையோடு

அவர்போட்டோ முதன்முதலில் என் கண்களில் பட்டது இமை கொட்டாமல் அந்த போட்டோ வை நானும் கொஞ்சநேரம் எப்படியோ பார்த்துக்கொண்டிருந்துவிட்டேன்.

போட்டோவுக்கு அடுத்த அரங்கில் புத்தம் புதிய பத்து ரூபாய் நோட்டுகள் ஐந்தும், இரண்டு ரூபாய், ஒருரூபாய் நோட்டுகள் ஐந்தும் இருந்தன. இந்தப் பணக்காரர்களிடம் இருக்கும் ரூபாய்களும் புதிதாகத்தான் இருக்கும்போலிருக்கிறது. நல்லவேளை அதில் சில்லறைநாணயம் எதுவும் இல்லை. அந்த மணிபர்சின் விலைகூட பத்து ரூபாய்க்குமேல் இருக்கும். அவ்வளவு அழகான மணிபர்ஸ்.

அந்த 'பர்சை' அவரிடம் எப்படி திருப்பிக்கொடுப்பது என்று நான் யோசித்துக்கொண்டிருக்கும்போது "மணிபர்சை காணவில்லையே, எங்கே போட்டுவிட்டேன்?" என்று யாரையோ கேட்கும் குரல் கேட்டது. சுவருக்குப் பக்கத்தில் வந்துநின்று கேட்டேன். மீண்டும் அதேமாதிரி சப்தம் கேட்டது. அது அவருடையகுரலாகத்தான்இருந்தது. "இதோ இருக்கிறது" என்று சொல்லி சுவற்றின்மேல் தூக்கிப் போடலாமா என்று முதலில் நினைத்தேன்.

ஆனால் அவரோ பெரிய மனிதர். தூக்கிஎறிவதைவிட, நேரில் போய் கொடுப்பது நல்லது என்று ஒருஎண்ணம் உண்டாயிற்று. ஆனால், வெட்கம் என்னைவேண்டாம் என்று தடுத்தது. நான் போகாமல் இருந்துவிடலாம். ஒருவேளை என் நாணயத்தைச் சோதிப்பதற்காகவே, அவர் பர்சைப் போட்டிருந்தால்.........? தோட்டக்கார கிழவரிடமாவது கொடுத்துவிட்டு வரலாம் என்று புறப்பட்டேன்.

"தாத்தா! தாத்தா!" என்று கூவிக்கொண்டே தோட்டத்திற்குள் புகுந்தேன். அங்கு ஒருவரையும் காணவில்லை. ஆனால் திடீரென்று பின்புறத்திலே இருந்து "தாத்தாவுக்குஎன்ன?" என்று சப்தம் கேட்டது. திடுக்கிட்டு திரும்பினேன்.

அவர் நின்றுகொண்டிருந்தார். தோட்டக்கார கிழவரை காணவே இல்லை. பேச வெட்கமாய் இருந்தது; நிற்கவும் பயமாக இருந்தது. என்னசெய்வதென்று தெரியாமல் குனிந்ததலையோடு நின்றுகொண்டிருந்தேன். ஆனால் அவர் சும்மா இருக்கவில்லை.

"இத்தடவை சேலை விழுந்துவிட்டதா? அல்லதுசட்டையா?" என்று குறும்புத்தனமாகக் கேட்டார். எனக்குச் சிரிப்பு வந்துவிட்டது. ஆனால் அடக்கிக் கொண்டேன். மௌனமாகவே நின்றேன். "பின் எதற்கு வந்தாய்?"என்று கேட்டார். நான் எதுவும் பேசாமல் 'மணிபர்சை'

எடுத்து நீட்டினேன். "அடடே! உன்னிடம் 'பர்ஸ்' எப்படி வந்தது? சேலையில் இருந்ததோ?" என்று அவராகவே சொன்னார். அதோடு அவர் சும்மா இருக்கவில்லை. "காணாமல் போன சாமானை கண்டுபிடித்துக்கொடுத்த உனக்கு ஏதாவது பரிசு கொடுக்கவேண்டும்!" என்று சொல்லிக்கொண்டே, பர்சைப் பிடிப்பதுபோல் என் கையை தொட்டார்.

மின்சாரத்திலே கைபட்டால் எப்படி இருக்குமோ அதே போன்ற உணர்ச்சி. நல்லவேளை உடனே ஓடிவந்துவிட்டேன். இல்லாவிட்டால்...என் கையை கெட்டியாகப் பிடித்திருப்பார். நான் ஓட ஓட, "ஜானகி! ஜானகி!" என்று இரண்டுதடவை கூப்பிட்டுக்கொண்டே இருந்தார்.

ஆண்களுக்கு உள்ளபடியே கொஞ்சம் துணிச்சல் அதிகம். ஒருபெண் ஒருஆணை இலேசாக பார்த்துவிட்டால்...அவள் யார், எங்கிருக்கிருள் என்றெல்லாம் அறியஆரம்பிக்கிறார்கள். பெண் சிரித்துவிட்டாலோ, பூரா விலாசமும் விசாரிக்கிறார்கள். சந்தர்ப்பம் கிடைத்தால் வேலிமுள் பற்றியோ, தோட்டக்காரனைப் பற்றியோ, ஆண்கள் கவலைப்படுவதில்லை. திருட்டுத்தனமாகவாவது பழத்தைப் பறிக்க முன் வருகிறார்கள்! இல்லாவிட்டால், என்னோடு எவ்வளவோ பழகிய வரைப்போல, ராமர் என் கையைத் தொடுவாரா? கண்ணோடு கண்பார்த்து எண்ணத்தைப் பரிமாறிக்கொண்டால் வாய்ப்பேச்சு தேவையில்லைஎன்ற வள்ளுவரின் காமசாஸ்திரத்தை ராமர் கரைத்துக் குடித்திருக்க வேண்டும்! அதனாலதான் அவருக்கு அந்தத் துணிவு.

அன்றிலிருந்து என் மனதில் ஒருவித மகிழ்ச்சி பொங்கிக்கொண்டே இருந்தது. ஆனால் அவர்மீது ஏழை நான் ஆசை கொள்வது உலகம் ஏற்கக் கூடியதா? ஏழை—பணக்காரர்களை காதல் பிணைப்பதும், கண்கெட்ட சமூகம் அதனைப் பிரிப்பதும் நாட்டிலே நடக்கும் நிகழ்ச்சிகளாய் இருப்பதைக்கண்டு என் நெஞ்சம் படபடத்தது.

"வீண் ஆசை வேண்டாம் காதலை மனதில் இருந்து வெட்டிவிடு!" என்று எனக்கு நானே போதனை செய்தேன். ஆனால் எங்கள் இருவரின் சந்திப்பைச் சாதாரண சந்திப்பு என்றே சொல்லமுடியாது! நான் அவரை சந்திப்பேன் என்று கனவிலும் நினைக்கவில்லை. கடவுளே பார்த்து...ஆம் எங்கள்சந்திப்பு, தெய்வ சந்திப்பு! நாங்கள் இருவரும் காதல் கொள்ளவேண்டும் என்று கடவுள் நினைத்துத்தான், புயலை உண்டாக்கி, சேலையை அவர் கையிலே கொடுத்து, காதல் ஓலையாக அதை அவர் என்னிடம்

திருப்பிக் கொடுக்கும் நிலையை உண்டாக்கி, காதலை சிருஷ்டித்திருக்கிறார். கடவுள் சித்தம் என்றும்வீண்போகாது; அவரை நேசிக்கவேண்டியதுதான் என்று என் பேதை மனம் நினைத்தது.

ஆனால் பொருளாதார நிலையை நினைக்கும்போது, 'பொருத்தமில்லாத ஜோடி' என்று எனக்கு நன்கு தெரிந்தது. நிறைவேற முடியாத காதலுக்கு ஆரம்பத்திலேயே சமாதிகட்டிவிட முயற்சித்தேன். ஆனால்...

கையிலேஉள்ள குழந்தை நிச்சயம் இரண்டொருநாளையில் செத்துவிடும் என்று தாய்க்குத் தெரிந்தாலும், சாகப் போகிற குழந்தைதானே என்று, அதை கவனிக்காமல் அலட்சியமாக இருக்கமுடியுமா? அதைப்போலதான் காதலை அகற்ற நான் முயன்றுகொண்டிருந்தும், அவரை ஒரு நாள் பார்க்காவிட்டால் எனக்கு அமைதியே இருக்காது. அவரும் தினமும் எனக்கு காட்சி அளிக்கத் தவறுவதே இல்லை.

ஒருநாள் நான் என் வீட்டு பின்புறத்தில் நின்றேன்; அவர் மாடியிலே நின்றார்; இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டிருந்தோம். அதை என் பாட்டி எப்படியோ பார்த்துவிட்டாள். "ஜானகி! வேண்டாம்மா இந்தஆசை! அவனுக்கும் உனக்கும் ஒத்து வராது!" என்று சொன்னாள். நான் பதிலே சொல்லவில்லை. என்னை வளர்த்தபாட்டி எனக்கு நல்லது தான் சொல்வாள்; ராமரை மறந்துவிட வேண்டியதுதான்; இனி அவரை பார்க்கக்கூடாது; என்றெல்லாம் முடிவு செய்துவிட்டேன்.

கருத்தில் குத்திய காதல் முள்ளை, காலில்குத்திய முள்ளை எடுப்பதுபோல் மெதுவாக எடுத்தேன். ஆனால் முள் ஒடிந்து விடுவதில்லையா? அதேபோல் தான் என் உள்ளத்திலே காதல் ஒடிந்து உள்ளே இருந்துகொண்டு, தினமும் வேதனையைக் கொடுத்துக்கொண்டே இருந்தது. கல்யாணம் என்ற 'முள்வாங்கி' இல்லாவிட்டால், என் வாழ்வு பாழ் என்று நான் நிச்சயமாக உணருகிறேன். ஆனால்......

(தொடரும்)

இரயில்வே போர்டுகளில்

இந்தி ஒழிப்புக் கிளர்ச்சி!

(நேயர்கள் கருத்து)

வேண்டாத இந்தியை விரும்பாத தமிழர்களிடத்தில் புகுத்துவது, புகுத்துவோரின் வெறிச்செயலையே காட்டுகிறது. "ஏக இந்தியா வாக்குவதற்கு" என்று அரசாங்கத்தார் கூறும் சமாதானம் பொருந்தவே பொருந்தாது!

ரயில் நிலையங்களில் இந்திக்கு முதலிடமளித்த "ஏக இந்திய புத்திரர்கள்" நம்செந்தமிழை வடநாட்டில் எங்காவது ஒரு மூலை முடுக்கிலேனும் எழுதியிருக்கின்றார்களா? இல்லை! தமிழை கற்கவாவது செய்வார்களா?—அரசாங்க மொழியாக்குவதற்கல்ல—அழகுள்ள மொழியென்பதற்காகவாவது, அருகிலுள்ள மொழி என்பதற்காகவாவது? செய்யமாட்டார்கள்! இதை எப்படி "ஏக இந்தியச் செயல்" என ஏற்க முடியும்?

மற்ற இனத்தவரை அடிமையாக்குவதற்குச் செய்த தந்திரமே இந்த தேவையற்ற இந்தி திணிப்பு வேலை. ஆகையால் தமிழரை அடிமையாக்குவதற்கு வீசப்பட்ட சூழ்ச்சிக் கயிறாகிய இந்தியை அறுத்தெறிந்த "ஆகஸ்ட்கிளர்ச்சி" ஆயுதம் தேவையே! தன்மானம் காக்க, தன்இனம் காக்க, தன் மொழி காக்கக் குதித்தெழுந்த "ஆகஸ்ட் கிளர்ச்சி" வீரர்கள் நாட்டிற்குத்தேவையே. இதை தமிழ் நாட்டிலிருந்து எதிர்ப்பவன் தமிழ்த் தாயின் வயிற்றில் பிறந்தவனாக இருக்கமுடியாது. தமிழனுமல்ல! வளர்க ஆகஸ்ட் கிளர்ச்சி! வாழ்க அவர்கம் தொண்டு!!

ஜே. நசரேன், கொழும்பு 1.

* * * *

தமிழ் என்றாலே இனிமையென்று பொருள். அத்தகைய இனியதேனினும் இனிய மொழியை இழிவாக எண்ணி, இந்திக்கு முதலிடம் தமிழ் நாட்டில்தந்து நம்மைமொழிப்பற்று அற்றவர்களாக்கும் ஏகாதிபத்திய வெறியர்களுக்கு தரும் சாட்டையடியே தோழர்கள்பலர் இரயில்வே போர்டுகளிலும், தபால் அலுவலகங்களிலும் இந்தியை அழித்தது. நம் மக்கள்பலர் தாய்மொழியே (தமிழ்) சரியான முறையில் படிக்காமல் இருக்கும்போது இந்தியைக்கொண்டு திணிப்பது நல்ல எண்ணமாக இருக்கமுடியாது. அப்படி என்ன தமிழில் இலக்கியமா இல்லை? வள்ளுவன் தந்த குறளை அன்னியநாட்டான் தங்கள் மொழிகளில் பெயர்க்கும்போது நம்நாட்டு மக்கள் அதை சரியாக படித்துக்கூட இருக்கமாட்டார்களே. இப்படிஇருக்க இந்திக்கு முதலிடம்தருவதுஎன்பது முறையாகுமா? தமிழின் சிறப்பை உணர்த்தி இந்தி போர்டுகளை அழித்த தோழர்கள்அனைவரையும் வரவேற்கிறேன்.

தி. பகுத்தறிவாளன், உதகை.

* * * *

கருஞ்சட்டைத் தோழர்கள் ரயில்வே நிலயங்களில் உள்ள போர்டுகளில் எழுதப்பட்டுள்ள ஹிந்தி எழுத்தை அழித்தனர். ரயில்வே போர்டுகளில் மூன்று பாஷைகள் எழுதப்பட்டிருக்கின்றன. 1 ஹிந்தி, 2 ஆங்கிலம், 3 தமிழ். இவர்கள் வடநாட்டு பாஷையை பகிஷ்கரிக்கும் தியாகிகள் என்றால் உண்மையில் ஹிந்தி எழுத்தை எங்கு இருந்தாலும் அழிப்பவர்கள்என்று இருந்தால் அவர்கள் தங்கள் வசம் இருக்கும் ரூபாய் நோட்டுகளில் ஹிந்தி எழுதப்பட்டிருக்கிறது. அதைக் கிழித்தெரிய யாராவது 1000ல் ஒருவருக்காவது மனம் வருமா? ஏதோ ரயில்வே நிலயத்தில் அரசாங்கத்தார் போர்டு இருக்கிறத என்று அழித்தார்கள். உண்மை ஹிந்தி எதிர்ப்பாளர்களாக இருப்பார்களானல் அவர்கள் சாமர்த்தியம் அந்த ரூபாய் நோட்டுகளில் காண்பிக்க வேண்டும்.

ராமஸ்வாமி, ஸ்ரீவில்லிபுத்தூர்.

* * * *

பெரியாரால் ஆரம்பிக்கப்பட்டு, அண்ணவும் கலந்துகொண்டு நடத்திய ஆகஸ்டு கிளர்ச்சி தமிழர்களுக்கு ஓர் விழிப்புணர்ச்சியை உண்டாக்கிவிட்டதெனலாம். ஒரு நாடு பிரிதோர் நாட்டை ஆதிக்கம்செலுத்துவதென்றல் முதலில் மொழியை அடிமைப்படுத்தவேண்டும். இது உலகறிந்த உண்மை. அதேபோன்றுதான் தமிழர்களை அடிமைப்படுத்த இந்திமொழியை தமிழாகளின்மேல் வலுக்கட்டாயமாகபுகுத்துகிருர்கள் வடவர்கள். இங்குள்ள நிலயங்களிலே ஹிந்திப் பெயர்கள் இருக்கின்றன. இதற்கு காரணம் கூறுபவர்கள் வட இந்தியர்கள் யாத்திரை வருகிருர்கள்—அதற்காக எழுதப்பட்டிருக்கிறது என்று. ஆனல் தமிழர்கள் காசி, ஹரித்துவார் செல்லும்போது அங்கு தமிழ்எழுத்துக்களைக் காணேம். ஆகவே இந்தியை அழித்தது வடநாட்டு ஏகாதிபத்தியத்திற்கு ஓர் சாவுமணி எனவே கொள்ளலாம். இலக்கணமில்லாத, காவியங்கள்அதிகமிராத ஒண்டவந்த இந்திக் கள்ளியை பெரியார் ஈ. வெ. ரா.வின் வேண்டுகோளுக்குப் பணிந்தும், அண்ணதுரையின் ஆணையை எற்றும் தமிழர்கள் அக்கள்ளியை விரட்டி அடித்தார்கள். இனி பள்ளிவாயிலாக நுழையப் பார்ப்பார்கள். அப்பொழுது மாணவர்கள் விரட்டிவிடுவார்கள்.

கொ. கி. ரெங்கராாசன், திருச்சி.

* * * *

“பொங்கும் தமிழுக்கு இன்னல் விளைந்தால் சங்காரம் நிசமென சங்கே முழங்கு”—பாரதிதாசன்.

தமிழுக்கு ஆபத்து என்றல் என் தாய் தடுத்தாலும் விடேன் என்று தமிழர்கள் கிளம்பினர்கள், இந்திப் பேயை விரட்டிவிட. ஆகஸ்ட் திங்கள் முதல்நாள் சூரியன் உதயமானதும் இரயில்வே நிலயங்களில்உள்ள இந்தி எழுத்துக்கள் வீரர்கள் பூசிய தார்மேகத்திற்குள் மறைந்தன.

விரும்பாதவர்கள்மீது ஒருபாஷையை பலாத்காரமாகத் திணிக்க வேண்டாம் என்று நேரு கூறியிருந்தும் அதை சுரண்டும்கூட்டத்தினர் கேட்டதாகத் தெரியவில்லை.

குரலுக்குஇசைந்தது தாய்மொழியே, அன்னியர் மொழியல்ல—என தான்எழுதிய கட்டுரையில் ராஜாஜீ கூறியிருக்கிருர்.

இன்பத் தமிழ்இருக்க தமிழ்நாட்டில் ஊர்ப் பெயர்கள் இந்தியில். கார்டு கவர்களில் எழுத்துக்கள் இந்தியில். இரயில்வே நிலயங்களில் முதலில் இந்தியில் ஊர்ப் பெயர். 2வது ஆங்கிலம். 3வது தமிழ்.

இந்தி 15 ஆண்டுகளுக்கு ஆங்கிலத்தின்கீழ் அடங்கி இருக்க வேண்டும் என்பது அரசியல் அமைப்பு. சட்ட விரோதமாக பலவிதங்களில் இந்திப்பேய் கொக்கரிக்கிறது.

தேமதுரத் தமிழோசை செருவெல்லாம் முழங்கவேண்டிய தமிழ்நாட்டில் தமிழுக்கு முதலிடமில்லை. மூன்ருவது இடம்! அடுக்குமா இந்த அநியாயம்? எனவே நமது மொழியை, பண்பாடுகளை, சுயமரியாதையைக்காப்பாற்ற, இந்திவெறியர்களின் யதேச்சாதிகாரத்தை,மடமையைவளர்க்கும் இலக்கியப் படையெடுப்பை, வடநாட்டு ஏகாதிபத்தியத்தை ஒழிக்க நடந்ததுதான் ஆகஸ்ட் கிளர்ச்சி.

தமிழர்கள் இம்மாதிரி சுரண்டும் கூட்டத்தினருக்கு சிறிதும் இடமளிக்க மாட்டார்கள் என்பதைத் தெரிந்துஇனிமேலாவதுவடமொழி ஆதிக்கத்திற்கு வழி தேடாமல் இருப்பார்களாக.

ஆர். செல்லத்துரை, மதுரை.

* * * *

ஹிந்திப் பெயர் அழிப்பு தற்பொழுது தேவையற்றது. எழுத்தறிவித்தவன் இறைவனாகும் என்பது பள்ளிப் பாலரும் படிக்கும் பாடம். ஆயிரம் தர்மங்களைவிட ஒருவனுக்கு கல்வியறிவித்தலே சிறந்த தர்மம் என அமரகவி கூறியுள்ளார். வியாபாரத்தைப் பெருக்க வேண்டும் என்று கூறுகின்ற நாம் இம்மாதிரி கிளர்ச்சியை ஆதரிக்கக் கூடாது. ஆனல் தாய்மொழியின்மீது வேற்று மொழி ஆதிக்கம்செலுத்த மொழிப் பற்று படைத்த எவனுமே சகியான். இக்கிளர்ச்சி வெறும் கட்சிவிளம்பரமாயின்றி ஒவ்வொரு தமிழனின் உள்ளத்திலும் பதியவேண்டுமாயின் தற்பொழுது இந்தி அழிப்பியக்கம் தேவையற்றது. தமிழ் எழுத்து அறிவிப்பிக்கும் இயக்கமே தேவை.

விருதைவேலன், விருதுநகர்.

* * * *

தன்னைப் பழித்தவனை தாய்தடுத்தால் விட்டுவிடு தமிழைப் பழித்தவனை தாய்தடுத்தாலும் விடாதே—எனனும் இசை முழங்கும் தமிழ்த் திருநாட்டில் தமிழ்மொழியைத் தாழ்த்தி இந்திமொழியை உயர்த்தி வரும் நிலைகண்டு தமிழர்கள் ஏன் தூங்குகிருர்கள்?

ராஜாஜீயின் ஆட்சியில் தமிழுக்கு ஆபத்து வந்தது 1939ல். அதை ஒருவாறு தடுத்து நிறுத்திேனம். மீண்டும், இப்பொழுது ஆபத்து வந்து ஆட்சி செலுத்துகிறது. புகைவண்டிநிலையப் பேர்களிலும், தபால்களிலும் கட்டாயமாக இந்தியை நுழைத்துவிட்டார்கள். தில்லியின் திமிராட்டத்தையும், சென்னை அமைச்சர்களின் திறமையற்ற போக்கையும், திட்டவட்டமான முடிவுடன் தீர்த்துக்கட்ட தமிழர்கள் ஒன்றுபடுவார்களா? அல்லது தமிழ் அழிந்தாலென்ன? இந்தி வாழ்ந்தாலென்ன?—என ஏதும் செய்யாதிருப்பார்களா?

அன்பானந்தன், ஹங்குரன் கெற,
(இலங்கை)

26 MAY 1955

காதற்கடல்

தொடர்கதை :: விருதை மகிழ்நன்

33வது அத்தியாயம்

சம்பந்தருக்குத் தண்டனை!

மானேஜரின் வீட்டை விட்டு வெளியேறியதுதான் தாமதம், சாரு அப்படியே அவளது தகப்பனர் தோள்மீது சாய்ந்து 'சித்...சித்...' என்று அழ ஆரம்பித்துவிட்டாள்.

"சாரு! என்ன சமாச்சாரம்? என்ன நடந்தது?" என்று பதறிப்போய்க் கேட்டார் சம்பந்தர்.

"அப்பா என்னல் இப்பொழுது நடக்கக்கூட முடியவில்லை. கால்கள் பின்னுகின்றன. ஒருரிக்ஷா, அல்லது குதிரை வண்டி வையுங்கள். வீட்டில் வந்து சொல்லுகிறேன் விஷயத்தை" என்று சாருகூற, அருகில் நின்ற ரிக்ஷா ஒன்றை அமர்த்தி, வீட்டை அடைந்தனர்.

ஒருமூச்சு அழுதுவிட்டுப் பின் மானேஜர் வீட்டில் நடந்தவற்றையும், கடைசியில் தான் மேற்கொண்ட சாகசத்தையும் ஒரு வார்த்தை பாக்கி இன்றிக் கூறி, தான் பத்திரப்படுத்திவைத்திருந்த இரு காகிதங்களையும் ஜாக்கெட்டிற்குள்ளிருந்து எடுத்துக் கொடுத்தாள்.

இவற்றைக் கேட்ட சம்பந்தரின் கண்கள் நெருப்புக்கங்குகள் போல் சிவந்தன. பழி வாங்கத் துடித்தது அவரது மனம். சாருவைச் சமாதானம் செய்து, மேற்கொண்டு நடக்கவேண்டியவைகளைக் கவனிக்கலுற்ருர்.

மறுநாள் அதிகாலையில் சப் இன்ஸ்பெக்டரின் வீட்டை விசாரித்து நடந்தார். சப்இன்ஸ்பெக்டரும் வீட்டில்தான் இருந்தார். அங்கு முன்னல் வைக்கப்பட்டிருந்த படம் ஒன்றைப்பார்த்து, தனது பால்ய நண்பரின் மகன் தான் சப் இன்ஸ்பெக்டர் என்பதை அறிந்து குலசம் விசாரித்துக்கொண்டு, வந்த காரியத்தை மெதுவாகக் கூறினர்.

அப்பகுதியின் பெரிய மனிதர் ஒருவரைப்பற்றி இப்படி கூறுகிருரே என்று முதலில் சற்று யோசனைதான் செய்தார் சப் இன்ஸ்பெக்டர். ஆனல் தகுந்த அத்தாட்சியுடன் சிக்கி இருப்பதால், ஊரில் பெரிய மனிதர்

பட்டம் வாங்கிக்கொண்டு, உள்ளுக்குள் ஊழல்களையும், ஊதாரித்தனத்தையும்கொண்டு திரியும் வஞ்சகர்களின் கொட்டத்தை அடக்கியே ஆகவேண்டுமென்று நினைத்தார். அத்துடன் தான் புதிதாக அவ்விடத்திற்கு மாற்றி வந்தசமயம், தனது மகளைப் பள்ளியில் சேர்த்துக்கொள்வதில் அந்த மானேஜர் தன்னை அலக்கழி செய்து படாதபாடு படுத்தி பலமுறை அலையவைத்துப் பின் சேர்த்துக்கொண்டதும் மனக் கண்முன் நர்த்தனமிடவே, அதற்கு வஞ்சம்தீர்த்துக்கொள்ள சந்தர்ப்பமும் கிட்டியதாகக் கருதினர்.

"ஐயா, நீங்கள் ஒன்றுக்கும் கவலைப்பட வேண்டாம். இது என் சொந்த விஷயம்போல. என்சொந்தசகோதரிக்கு நேர்ந்த அவமானமாகவே கருதுகிறேன். ஆகவேண்டியதை நான் கவனித்துக்கொள்ளுகிறேன். நீங்கள் வீட்டிற்குப் போய் 'சாரு'வைத் திடமாகஇருக்கச்சொல்லுங்கள்"

"உன்னைத்தான் நம்பி இருக்கிறேன் தம்பி. நீயும் கைவிட்டால், பின்எங்களைப்போன்றவர்கள் ஒன்று ஊரைவிட்டே ஓட வேண்டும், அல்லது மானத்தை இழக்க மனமின்றி மடிந்துஒழிய வேண்டும். இதைத்தவிர வேறு வழி புலப்படவில்லை"

"நீங்கள் கலங்க வேண்டாம். உங்கள் காலடியில் விழவைக்கிறேன் அந்தக் கயவனை. அது கிடக்கட்டும். அவனுக்குத் தண்டனைகொடுக்குமுன், உங்களுக்கு ஒரு தண்டனை இப்பொழுது கொடுக்கப்போகிறேன்"

"என்ன தம்பி...எனக்குத் தண்டனையா?" என்று சற்றுத் திடுக்கிட்டார் சம்பந்தர்.

"ஆம், இப்பொழுதுபலகாரம், காபி எல்லாம் இங்கு சாப்பிட்டு விட்டுத்தான் நீங்கள்போகவேண்டும்" என்று கூறிச் சிரித்தார் சப் இன்ஸ்பெக்டர்.

"நான் பயந்தே போய்விட்டேன்! உன் அப்பாவின் குணத்தை அப்படியே அமுல் செய்கிறாயே"

"உங்களைப்பற்றி என் அப்பா அதிகம் சொல்லி இருக்கிறார். வாருங்கள் பலகாரம் சாப்பிடச் செல்லலாம்" என்று எழுந்தார் சப்இன்ஸ்பெக்டர்.

"வீட்டில் சாரு என்வரவை எதிர்பார்த்துக் காத்திருப்பாள். இன்னொருசமயம் வருகிறேன்" என்று சம்பந்தர் மெதுவாக நழுவ முயன்றார். ஆனால் சப் இன்ஸ்பெக்டர் விட்டால்தானே. கையைப் பிடித்து இழுத்துக் கொண்டே சென்றுவிட்டார் சாப்பாட்டு அறைக்குள்.

34வது அத்தியாயம்
பெரிய இடத்துச் சங்கதி!

"வாருங்கள் சார், வாருங்கள்! ஏது இந்நேரம்? வருவதாகக் கூட சொல்லியனுப்பவில்லையே"

என்று கேட்டுக்கொண்டே வீட்டிற்குவந்த சப்இன்ஸ்பெக்டரை வரவேற்ருர் பள்ளி மானேஜர்.

"ஒரு முக்கிய விஷயமாகத் தங்களிடம் தனித்துப் பேச வேண்டும்"

"அதற்கென்ன, என் அறைக்குப் போவோம், வாருங்கள்" என்று அவரை அழைத்துக் கொண்டுபோய் இருவரும் நாற்காலியில் எதிர்எதிராக அமர்ந்தார்கள்.

"சார், என்னை மன்னிக்க வேண்டும். என் கடமையைச் செய்ய வந்துள்ளேன்" என்று ஆரம்பித்தார் சப்இன்ஸ்பெக்டர். இதைக்கேட்டவுடன் மானேஜரின் மனம் திடுக்குற்றது. கலக்கத்துடன் "என்ன விஷயம்?" என்ருர்

"தங்கள்மீது ஒரு கேஸ் தாக்கலாகி இருக்கிறது. எனவே தாங்கள் ஸ்டேஷன்வரை வந்து செல்லவேண்டும்"

"என்ன, என் மீது கேஸா! யார்கொடுத்திருக்கிருர்கள்? எது விஷயமாக?" சற்று குழப்பத்துடன் கேட்டார்.

"தங்கள்மீதுதான். தம்பெண்ணைக் கர்ப்பழிக்க முயன்றதாக சம்பந்தர் என்பவர் கொடுத்திருக்கிருர்"

"யார் சம்பந்தரா?" முதல் நாள் சம்பவம் அவர் மனத்திரையில் சினிமாப்படம்போல் தொடர்வாகக் காட்சியளித்தது. சாருவின் சாகஸம் இவ்வளவு சீக்கிரம் இப்படிவிபரீதத்தில் கொண்டுவந்துவிடுமென்று அவர்கொஞ்சம்கூடக் கருதவில்லை. கட்டழகியை அன்று மாலை கட்டித் தழுவப் போகிருேம் என்று காலைக்கதிரவன் உதயமாகி படுக்கையைவிட்டு எழுந்த நிமிடம் முதல் கனவு கண்டிருந்த அவருக்கு, இச்செய்தி பெரும் அதிர்ச்சியைக் கொடுத்தது. இருந்தாலும் சற்று தைரியத்தை வரவழைத்து சிரித்துக்கொண்டு "சப் இன்ஸ்பெக்டர் சார்! ஆள் மாருட்டத்தில் இங்குவந்து கூறுகிறீர்கள் என்று நினைக்கிறேன்"

"பெண்கள் பள்ளி மானேஜர் என்பது தாங்கள்தானே? சாரு என்ற பெண் உங்கள் பள்ளியில் தானே வேலை பார்க்கிருள்?"

"ஆம்... ஆனல் இதில் ஏதோ சூது இருக்கிறது"

"அப்படியா, வேதனை வேண்டாம்; வேண்டுவனசெய்யலாம். ஸ்டேஷனுக்கு வருகிறீர்களா?"

"சப்இன்ஸ்பெக்டர்சார், இந்த விஷயத்தில் தாங்கள் எனக்கு உதவி செய்யவேண்டும். எவ்வளவு செலவு ஆனுலும் பரவாயில்லை. என் கௌரவத்தைப் பாதிக்கும் வகையில் இக்கேஸ் ஜோடிக்கப்பட்டிருக்கிறது என்றே கருதுகிறேன்"

"நானும் அப்படித்தான் சந்தேகப்பட்டேன். உங்களைப் போன்ற பெரியமனிதர்கள், இப்

பேர்பட்ட அற்ப விஷயத்திலெல்லாம் சம்பந்தப்பட மாட்டீர்களென்று அப்பொழுதே கருதினேன். ஆனால் என்னநடந்தது என்பதை......''

சப் இன்ஸ்பெக்டரின் பேச்சு உழன்ற நெஞ்சத்திற்கு உரம் ஊட்டியதுபோல் இருந்தது மானேஜருக்கு. சற்று தெம்புடன் பேசலுற்றார்.

''சாரு என்பவள் என் பள்ளியில்தான் வேலை பார்க்கிறாள். நான் ஸ்கூலுக்குச் செல்லும் சமயமெல்லாம் ஒருமாதிரியாகப் பார்ப்பாள். நான் சட்டைசெய்வதில்லை. நேற்றுமாலை வீட்டிற்கே வந்துவிட்டாள். வந்தவள் அப்படியும் இப்படியுமாகதழுக்கி மினுக்கிப் பேசினாள். நான் புரிந்துகொண்டேன். அவள் இச்சைக்கு நான் இசையவில்லை என்றவுடன், சூர்ப்பனகைமாதிரி பலவந்தத்தில் ஆரம்பித்துவிட்டாள்''

''என்ன? ஒரு பெண் ஆணைப் பலவந்தம் செய்வதா!'' என்று இடைமறித்தார் இன்ஸ்பெக்டர்.

''ஆமாம் சார்! இந்த விஷயம் இதுதான் எனக்கும் முதல் அனுபவம்!''

''அதுதான் உங்கள் செய்கையிலிருந்தே தெரிகிறதே! அப்புறம்''

''அப்புறம் என்ன! அந்தச் சமயம் எதிர்பாராதவிதமாக அவள் தந்தை அங்கு வந்துவிட்டார். உடனே அசோக்குமாரில் திஷ்யரக்ஷிதை அசோகரைக் கண்டவுடன், குணாளன்மீது சுமத்திய பழிபோல, நான் அவளை பலவந்தம் செய்ய முயன்றதாகக் கதறிவிட்டாள் கள்ளி!''

இவற்றைக் கேட்டபோது சப் இன்ஸ்பெக்டருக்குக்கூட சற்று கலக்கம் ஏற்பட்டுவிட்டது. ஒரு சமயம் விபரீதமாகப் போய்விடுமோ என்றுகூட பயந்துவிட்டார் தான் மேற்கொண்ட செய்கை குறித்து.

''சாகசக்காரி! இந்தப் பெண்களே இப்படித்தான் சார்! கடலின் ஆழத்தையும், வானத்தின் உயரத்தையும்கூட அளந்துவிடலாம். ஆனால் இந்தச் சேலை கட்டியமாதரின் உள்ளத்தையும், அதில் பொங்கிவரும் குமுறல்களையும் அளவிடவே முடியாது சார்! பாருங்களேன், அவள் தவறை உத்தமராகிய உங்கள் மீதுசுமத்திவிட்டாளே! இதைத் தீர விசாரித்துத் தக்க தண்டனை கொடுக்கவேண்டும்''என்றுகூறிக் கொண்டே மேஜைமீது கிடந்த லட்டர்பேடை லாயக்காகப்புரட்டிப் பார்த்தார்.

''அவள் தகப்பன் அந்நேரமே 'உன்னை என்னசெய்கிறேன்பார்' என்று எச்சரித்தான். ஆனால் இப்படி வரும் என்று நான் எதிர்பார்க்கவே இல்லை சார்''

''நீங்கள் இப்பொழுது கூறியதை அப்படியே ஸ்டேஷனில்

வந்துகூறுங்கள். நான் ரிக்கார்டு செய்துகொள்ளுகிறேன். குற்றவாளியை சும்மாவிடக் கூடாது. இவற்றைருசுப்பிக்க அவள் எழுதிய தபால்கள் ஏதாவது இருக்கின்றனவா?''

"தபாலா? இல்லையே!''

"ஆனால் அவர்கள் தபால்கள் 3 சமர்ப்பித்திருக்கிறார்களே!''

"மூன்றா?'' அவர் திடுக்கிட்டு திருட்டுவிழிவிழித்தார். இதைச் சாடையாக, சப் இன்ஸ்பெக்டர் கவனித்துக்கொண்டார்.

"நான்தான்எழுதினேன் என்பதற்கு ஆதாரம்?''

"முழுதாக எழுதப்பட்ட கடிதத்தின்மேலே உங்கள் விலாசமிட்ட அச்சுப் பாகம் கிழிக்கப்பட்டிருக்கிறது என்பதை மற்ற இரண்டு அரைகுறையாக எழுதி கசக்கிப் போடப்பட்ட லட்டர் பேப்பர்கள் மேலேகிழிக்கப்படாமலும், முழுவதும்எழுதப்பட்ட தபாலிலுள்ள பல வாசகங்கள் அப்படியே மற்ற இரண்டிலும் காணப்படுவதிலிருந்தும் தக்க ருசு தங்களைக் குற்றம் சாட்டி இருக்கிறது என்றே கருதுகிறேன்''

இவற்றைக்கேட்ட மானேஜர் அப்படியே அசந்துபோய்விட்டார். தனது முட்டாள்தனத்தையும், இவ்வித காரியங்களில் இதற்குமுன் ஈடுபடாமலிருந்து இன்று சிக்கிக்கொண்டதையும் எண்ணிக் கலங்கினார். அப்பொழுது "என்ன சார் போகலாமா ஸ்டேஷனுக்கு'' என்று எழுந்தார் சப் இன்ஸ்பெக்டர்.

"சார், ஒரு விஷயம், உங்களிடம் மறைக்க விரும்பவில்லை. வாதிட்டுகொண்டிருக்கவும்விரும்பவில்லை. அந்தத்தபால்கள் நான் எழுதியவைதான். என்னுடைய கௌரவத்திற்கு இழுக்குவராமலும், கேஸ்ஏற்படாமலும் தடுத்து, எனது மானம் மரியாதையைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு தங்களுடையது. இந்தச் சமாச்சாரங்கள் ஒன்றுகூட வெளிக்குவராமல் இருக்கவேண்டும்'' என்று இன்ஸ்பெக்டர் கையைப்பிடித்துக்கொண்டு அவர் கேட்டபாணி மிகவும் பரிதாபமாக இருந்தது.

"என்ன சார், கொஞ்சநேரத்திற்குமுன் அந்தப் பெண் அல்லவா உங்களைப் பலவந்தம் செய்ததாகக் கூறினீர்களே''

"எக்கச்சக்கமாக மாட்டிக்கொண்டால் பூனையும் புலியாகும் என்றபடிதான். ஆனால் உண்மை மறைந்தாவிடும்?''

"உங்கள் மானம், மரியாதை, கௌரவம்மீது இவ்வளவு அக்கறை காட்டுகின்றீர்களே, ஒரு பெண், அபலை, உபாத்திமைத் தொழில் புரிந்து வயிற்றைக் கழுவி வாழும் உத்தமியின்கற்பு என்பது உங்கள் விளையாட்டுப் பொருளா?''

"சார் மன்னித்துவிடுங்கள். இதிலிருந்து விடுபடவழி நீங்கள்

தான்கூறவேண்டும்' என்றுகூறி பர்ஸிலிருந்து இருநூறுரூபாயை எடுத்து நீட்டினார்.

"உங்களைப்போன்ற கனதன வான்களால்தான் சார் எங்களைப் போன்ற உத்தியோகஸ்தர்கள் பலருக்கு அபகீர்த்தியும், சபலப் பட்டவர்களுக்குலஞ்சப்புத்தியும் ஏற்பட்டு, நியாயம் காற்றில் விடப்படுகிறது" என்று கூறிக் கொண்டே அவர்கொடுத்த இரு நோட்டுகளைவாங்கினார். இதைக் கண்ட மானேஜர் முகம் சற்று மலர்ச்சியுற்றது. ஆனால் அடுத்த வினாடி, இன்ஸ்பெக்டர் கூறிய சொற்கள், 'தேளுக்குப் பயந்து பாம்புப்புற்றில் கைவிட்ட' கதை யாகத் தோன்றியது.

"சார், முன்பு நீங்கள் செய்த குற்றத்திற்கே முடிவு காணாத நிலையில், இப்பொழுது லஞ்சம் கொடுக்க முன்வந்த குற்றமும் தாக்கல் செய்யப்போகிறேன்" என்றார் அலட்சியச் சிரிப்புடன் சப்இன்ஸ்பெக்டர்.

அழாக்குறையாக அவர் கை யைப் பிடித்துக் கெஞ்சவே சப் இன்ஸ்பெக்டர் ஒரு முடிவுக்கு வந்தார்.

"நான் சொல்லுகிறபடி செய் தால் ஒரு வழியாக சுமுகமாக முடிக்கலாம் என்று நினைக்கி றேன்" என்றார்.

"என்ன சார்! சொல்லுங்கள். நீங்கள் சொல்வதை அப்படியே கேட்கிறேன். சொல்லுங்கள்"

"இப்பொழுது என்னுடன் வாருங்கள்"

"எங்கே ஸ்டேஷனுக்கா?"

"பயப்படவேண்டாம்! சம்பந் தர் வீட்டிற்கு. அவரிடமும், அவர் பெண்ணிடமும் நேரில் போய் மன்னிப்புக் கேட்டுப் பார்க்கலாம்"

"உங்கள் உசிதப்படியே செய் வோம் சார்"

"ஆனால் ஒன்று, இதன்பின் பழிவாங்கும்நோக்கத்தோடு அப் பெண்ணைப் பள்ளியிலிருந்து நீக் குவதோ, அல்லது பிற இடை யூறுகள்செய்ய நேர்முகமாகவோ மறைமுகமாகவோ நீங்கள்முயல் வதாக......"

"அவ்வளவு அற்பப் புத்தி படைத்தவனுமல்ல, இதற்கு முன் இப்படிப்பட்டவற்றில் ஈடு பட்டவனும் அல்ல. ஏதோ சந் தர்ப்ப வசத்தாலும், சபல புத்தி யாலும் நேர்ந்துவிட்டது"

"பேச்சளவில் கூறிவிட்டால் மட்டும் போதாது"

"எழுத்து மூலமே கொடுக்கி றேன். போதுமா?"

"சரி அதை அங்குபோய் கவ னித்துக்கொள்வோம். புறப்படுங் கள்" என்று கூறவே இருவரும் சம்பந்தர் வீடு நோக்கிப் புறப் பட்டார்கள்.

(தொடரும்)

★

கருகிய மலர்

[சிரேகி]

அன்று விடியற்காலை; நீல வானத்தில், தான் இன்றைக்கு உலகத்தையெல்லாம் சுற்றியலைய வேண்டுமே என்ற எண்ணத்தோடே காலைக்கதிரவன் தன் வெண்ணிறக் கிரணங்களை அழகிய மெல்லியச் சுடராய் இலேசாக வெளியில் வீசிக்கொண்டிருந்தான்.

அந்நேரத்திலும் அந்த டாஜ் பங்களா மௌனத்தில்தான் புதைந்துகிடந்தது. அங்குள்ள அமைதியைக் குலைக்க அந்தக் கடிகாரம் மட்டும் ஓயாமல் 'டிக், டிக், டிக்' என்று சத்தம்செய்து கொண்டிருந்தது. அவ்வீட்டின் ஒரு அறையில் ஒரு இளம்பெண் தன்னைமறந்து அயர்ந்த நித்திரையில் ஒரு கட்டிலின்மீது அழகிய கொடிபோன்றுதுவண்டு தூங்கிக் கொண்டிருந்தாள். அவள்முகம் செந்தாமரையைப்போல சிவந்திருந்தன. தன்கடமையை தவறாமல் செய்யும் கடிகாரம் 'ட்ரீங்...ட்ரீங்...ட்ரீங்'என ஏழுமுறை ஒலித்துவிட்டு மறுபடியும் தன் வேலையைச் செய்யத்துடங்கின.

அந்த மணியின் ஓசை சுகஸ்தியை விழிக்கச்செய்தது. அவள் பெயர் அதுதான். 'இவ்வளவு நேரம் தூங்கிவிட்டோமே' என்று விரைவாக எழுந்து குளித்துவிட்டு, காலை டிபனை முடித்து, தன்னை அலங்கரித்துக்கொண்டு பள்ளிக்குப் புறப்பட்டுச் சென்றாள். அடுத்த இரண்டு மூன்று வீதிகள் சென்றால் அவளுடைய பள்ளிக்கூடம். அதில் அவள் ஓர் உபாத்தினியாய் இருந்து மாதம் 75 ரூபாய் சம்பளம்பெற்றுத் தன் காலத்தைக் கடத்தி வருகிறாள்.

அன்று பள்ளி முடிந்ததும், பகல் ஒரு மணிக்கு வீட்டை நோக்கி வந்துகொண்டிருந்தாள். அவள்நடையில் உற்சாகம் காணவில்லை. அப்போது ஒரு இளம் வாலிபன், அழகிய சுருண்ட கேசம், சுமாரான நிறம், கவர்ச்சியான தேகக்கட்டு. அவன் தன்னைச் சாதாரண நவநாகரீக உடையால் அலங்கரித்துக்கொண்டு ஒரு வீட்டின் முன் நின்றிருந்த 'ப்யூக்' காரில் ஏறினான். அவனைத் தொடர்ந்தே ஒரு இளம் பெண்ணும் காரில் ஏற முயன்றாள். உடனே அவன் அந்த யுவதியின் கையை லேசாகப்பிடித்து உள்ளுக்கு அழைத்துக்கொண்டான் கார் காற்றெனப் பறந்தது.

இந்தக் காட்சி அவளைப் பிரமிக்கச் செய்தது. தான் எங்கிருக்கிறோம் என்பதை மறந்து 'இவரா' என்று கத்திவிட்டாள். ஆனல் அந்தக் கார் அங்குஇருந்தால்தானே. அவள்தலை சுற்றியது. மனம் வேதனைப் புயலில் சிக்கியது. ரத்தம் துடித்தது. எப்படியோ வீட்டை அடைந்து சோபாவில் திடீர் என்று சாய்ந்தாள். துக்கம்தாங்காமல் விம்மி விம்மி அழுதாள். அடுத்த நிமிஷம் கடந்த 3 வருடத்திற்கு முன்பு நடந்த சம்பவம் அவள் மனக்கண்ணில் காட்சியளித்தன.

* * * *

அவ்வருடம்தான் அவள் ஆசிரியைப் பயிற்சிக்குச் சென்னை சென்ருள். அவள் அண்ணன் குமார்தான் டிரெயினிங் ஸ்கூலிற்கு அழைத்துச் சென்ருன். அவளைச் சேர்த்துவிட்டு மறுபடியும் குமார் திரும்பிவிட்டான். ஹாஸ்டல்வாழ்க்கை சுகஸ்திக்கு மிகவும் பிடித்திருந்தது. தன் சிநேகிதிகளின் அரட்டைமொழியும், சுவாரஸ்யமானசம்பாஷணைகளும் பற்பலவிதமானவிளையாட்டுகளும் அவள் மனதைக் கவர்ந்தன. மாணவர், மாணவிகளின் பள்ளி வாழ்க்கையே ஒரு தனி சிறப்புத்தானே. உடை, உணவு என்னும் கவலை இல்லாமல் புத்தகத்தை கையில் வைத்திருப்பதே ஒரு தனிக் கலை என்று நினைத்து ஓடி, ஆடி, விளையாட்டிலும், அரட்டையிலும் காலம்கழிப்பது தானே அவர்களின் இன்பம்.

இதே இன்பத்தில் சுகஸ்தி ஒரு வருடத்தை ஜூனியர்வகுப்பில் கழித்தாள். கோடைகால விடுமுறையும் வந்தது. மாணவிகள் அன்று ஒரே குதூகலத்தில் ஆழ்ந்திருந்தனர். சிலர் தங்கள் தோழிகளைப் பிரிய வேண்டுமே என்று துக்கப்பட்டனர். எப்படி இருப்பினும், விடுமுறைக்குப் பிரிந்துதானே ஆகவேண்டும். சுகஸ்தியும் ரயில் ஏறிவிட்டாள். தன் அண்ணனுக்கு ஸ்டேஷனுக்கு வரும்படி கடிதம் எழுதியிருந்தாள்.

வண்டியும், காட்பாடி வந்தடைந்தது. அவள் அண்ணுவை வண்டியில் இருந்தபடியே அவள் கண்கள் தேடின. குமாரும் கைக்குட்டையை வீசியபடியே 'நான் இங்குதான்இருக்கிறேன்' என்று தெரிவித்தான். இதை சுகஸ்தியும் பார்த்தாள். அப்போது அவள் அண்ணனைமட்டும் அல்ல, அவன் அருகில் அழகிய ஒரு வாலிபன் தன்கைக்குட்டையினல் வியர்த்திருந்த தன் முகத்தைத் துடைப்பதையும் கவனித்தாள். அந்த வாலிபனை வண்டியிலிருந்தபடியே 'யாராய் இருக்கும்' என்று சுகஸ்தி அவனை உற்றுப் பார்த்தாள். அந்த வாலிபனும் அவளை உற்று நோக்கினன். இருவர் கண்களும் சந்தித்தன. அவற்றில்தான் என்ன கவர்ச்சி.

இதற்குள் குமார் தங்கை இருந்த கேரேஜ் அருகில் வந்து பெட்டி படுக்கைகளை இறக்கி

விட்டான். அந்த வாலிபனும் உதவி செய்தான். பின் மூவரும் வீட்டையடைந்தனர். "குமார், நான் மாலை வருகிறேன்" என்று கூறிச் சென்றான் அவ்வாலிபன்.

சுகஸ்திக்கு அவனைப்பற்றி அறிய மிக ஆவலாய் இருந்தது. அவள், அண்ணாவின் அருகில் சென்று, "அண்ணா, உன்னுடன் வந்தவர் யார்? புதியவர்போல இருக்கிறதே" என்றாள். குமாரும் தலையை அசைத்துவிட்டு "ஆமாம் சுகி, அவன் புதியவன் தான். என்னுடைய ஆபீஸில் தான் அவனும் ஒரு 'கிளார்க்' காக இருக்கிறான். மிகவும் நல்லவன். அவனால்தான் எனக்கும் வேலை கிடைத்தது. நம் வீட்டிலிருந்து ஒரு மைல் தூரத்தில் தான் அவன் வீடும் உள்ளது. அம்மாவும், ஒரு சிறிய தங்கையும் தவிர ராஜாவுக்கு வேறு யாரும் இல்லை" என்று குமார் ராஜாவைப்பற்றிய வரலாற்றைத் தெரிவித்தான்.

இருவரும் ஆபீஸ்முடிந்ததும், மாலை ஒன்றாக சைக்கிளில் வருவார்கள். ராஜா தவராமல் குமாரின் வீட்டிற்குச் செல்வான். எப்போதாவது அவன் வரத் தவறினால் "என்அண்ணா ராஜா இன்று வரவில்லை?" என்று துணிவுடன் கேட்டுவிடுவாள். அவன் ஒருநாள் தன்வீட்டிற்கு வராவிட்டாலும், அவள் உற்சாகம் குறைந்துவிடும். இந்தஇன்பத்திலேயே இரண்டு மாத விடுமுறை சக்கரம்போல் சுழன்றது. அடுத்த திங்கட்கிழமை சுகி சென்னை செல்லவேண்டும். அவள் மனம் ஏதோ வேதனையால் தவித்தது. 'நாம் விடுமுறைக்குவந்து இத்தனை நாளில் ராஜாவுடன் ஒருநாள்கூட பேசவில்லையே என்றும், எப்படியும் இன்று வந்தால் பேசித்தான் தீரவேண்டும்' என்றும் தன்மனதைத் தேற்றிக்கொண்டாள். ஆனால் அன்று ராஜா வரவே இல்லை.

* * * *

விடிந்தால் ஞாயிற்றுக்கிழமை குமாரும் சுகியும் அன்று மாலை கடைவீதி வழியாய் சென்றுகொண்டிருந்தார்கள். அப்போது "என்னப்பா? எங்கே கிளம்பிவிட்டீர்கள்? நானும் கலந்துகொள்ளலாமா?". என்று குறும்புப் பார்வையோடு நண்பனின் முதுகைத் தட்டிக் கேட்டான் ராஜா.

ஒருகணம் திகைத்த குமார் சமாளித்துக்கொண்டு "நாளை சுகி ஊருக்குப் புறப்படுகிறாள், அவளுக்கு வேண்டியதை வாங்கிக்கொடுக்கவே இப்போது அவளுடன் வந்தேன்" என்று கூறி, ஷாப்பிற்கு சென்று அவளுக்கு வேண்டியதை வாங்கிக்கொடுத்துவிட்டு மூவரும் 'பார்க்கில்' போய் அமர்ந்தார்கள். ஏதேதோ நண்பர்கள் இருவரும் தர்க்கம் செய்துகொண்டிருந்தனர். இவர்களிடையில் சிக்கின சுகி, இவர்கள் பேச்சுக்கு ஒரு முடிவு கட்ட வேண்டும் என்று "அண்ணு, இந்தியன் இங்க் வாங்க மறந்துவிட்டோமே! அவசியம் அது எனக்குத் தேவை" என்று கூறினாள். உடனே குமார் "சரி, இங்கேயே இருங்கள். நான் போய் ஒரு நிமிஷத்தில் வாங்கி வந்துவிடுகிறேன்" என்று கூறிச் சென்றான்.

சுகிக்கு ஏன்தான் அண்ணனை அனுப்பிவிட்டோமோ என்றாகிவிட்டது. ஒரு யுவன் எதிரில் ஒரு யுவதி உட்கார்ந்திருப்பதை மற்றவர்கள் பார்த்தால்......அவளுக்கு மிகவும் வெட்கமாய்இருந்தது. அதே நேரம் ரேடியோ அவர்களைக் கேலி செய்வதைப் போல "இளங்காதலர் ஒன்றாய் கொண்டாடும்உறவே ஆனந்தம்" என்ற பாட்டை ஒலித்தது.

முதலில் ராஜாவே பேச்சை ஆரம்பித்தான். "சுகி நீங்கள் எப்போது ஊருக்குப் போக வேண்டும்?"

"திங்கட்கிழமை" இதைக்கூறுவதற்குள் திணறியேவிட்டாள்.

"நீங்கள் வந்ததிலிருந்து நாட்கள் போனதே தெரியவில்லை. சென்னை சென்றுவிட்டால் என் நினைவு உங்களுக்கு எங்கே வரப்போகிறது?"

"ராஜா, நீங்கள்என்னைக் கேலி செய்வதைப்போல என்மனதைச் சித்திரவதை செய்கிறீர்கள்"

"உங்களைக் கேலிசெய்ய எனக்கென்ன உரிமையுள்ளது?"

"உரிமைஇல்லாமல்தான் தனிமையில்பேச அண்ணு உத்திரவு கொடுத்துச் சென்றாரோ" என்றாள் சிரித்துக்கொண்டே.

"அப்படியானால் என்னைஉண்மையில்........."

"........." அவள்பதில்இல்லை

இதற்குள் குமார்வந்துவிடவே மூவரும் வீட்டைநோக்கிப்புறப்பட்டார்கள்.

* * * *

மணந்தால் ராஜாவை மணப்பது, இல்லையென்றால் வாழ்நாள் முழுவதும் கன்னியாகவேகாலம் கழிப்பது என்ற முடிவுடன் ஆசிரியைப் படிப்பை முடித்து ஊர்வந்து சேர்ந்தாள் சுகி.

நெருப்பும் காற்றும் கலந்தால் கட்டை பிரகாசத்துடன் எரியத்தானே செய்யும். சுகி, ராஜா காதல் வரவர பிரகாசத்தோடு பற்றி ஜுவாலைவிட்டது. மல்லி

மொட்டுபோல் மலரத்துடங்கின. காதல் செல்லும் பாதை கண்ணீரில்தான் முடிவடையும் என்பது இவர்களுக்கு மட்டும் விதிவிலக்கா என்ன? காதல் என்ற மலர் மலர்ந்தால் அதைக் கிள்ளுவதற்குத்தான் பலர் காத்துக்கிடக்கின்றனரே.

இவர்கள் வாழ்க்கையிலும் புதிராகநின்முன் சுகியின்மாமன் மகன் ராமமூர்த்தி. 'தன்னைத்தான் அவள் மணக்கவேண்டும். தன்னைவெறுத்தால் அவள்காதலை நாசப்படுத்துவேன். அப்படி அவள் அவனைக் கல்யாணம்செய்துகொண்டாலும் அவளை அவனிடம் வாழவிட மாட்டேன். நாடோடிப் பயல் வரட்டும் இனிமேல்இப்பக்கம், நான்எதற்கும் துணிந்திருக்கிறேன்'என்று வெறி பிடித்தவன்போல் பறை சாற்றித் திரிந்தான்.

இதை ராஜா கேள்விப்படாமலா இருப்பான். இந்தப் பயங்கர அதிர்ச்சி அவனைத்தாக்கியது. பயித்தியம்போல் அலைந்தான். நண்பன் குமாரின்நட்பும் அறுந்தது சுகியைப்பார்க்க ஏங்கினன்.

ஒருநாள் மாலைமங்கும் வேளை. கையில் ஏதோ புத்தகச் சுருளுடன், கவலை தோய்ந்த முகத்துடன், அமைதியற்ற உள்ளம் அலைமோத, சோலையில் ஒரு கல்லின்மீது அமர்ந்திருந்தான்ராஜா. அப்பொழுது எதிர்பாராதவிதமாக அங்கு வந்த சுகி "ராஜா" என்று உணர்ச்சியோடு கத்தி அவன் மார்பின்மீது விழுந்து விம்மி விம்மி அழுதாள். "கவலைப்படாதே சுகி, உண்மைக் காதலை ஒப்புக்கொள்ளாதஉலகம் இது. கடலின் கொந்தளிப்பும், காதலரின் உள்ளக் கொந்தளிப்பும் ஓயாதவைகள். துயரப்பட்டு என்ன செய்வது! தூய காதல் கொண்டு என்ன செய்வது! நீயாவது ராமமூர்த்தியை மணந்து மகிழ்ச்சியாய் இரு!" அவள் கரங்களைப் பிடித்து கனிவுடன் கூறினன்.

"ராஜா! இவ்வார்த்தையைக் கூற எப்படிமனம்துணிந்தீர்கள்? எத்தனைநாள் இதை என்னிடம் கூற வேண்டும் என்று காத்துக்கிடந்தீர்கள்? நம் காதல் மணம் நிறைவேற வேண்டும்; இல்லையென்றால் மரணம் நம் இருவரையும் தழுவ வேண்டும்" இப்படி ஆழமாய் உறுதியுடன் கூறினள் சுகி.

அவள் கூறியது அவனைப் பிரமிக்கச் செய்தது. "சுகி, நம் காதல் மறக்கமுடியாதது. நாம் இறக்க நேர்ந்தால் நம்மைப்பற்றி உலகம் பலவிதமாய்ப் பேசும். என் மனம் பெரிதும் புண்பட்டுள்ளது. நான் இவ்வூரில்இருக்க விரும்பவில்லை. நாளையே வெளியூர் செல்லப்போகிறேன். வேலையையும் ரத்துச்செய்துவிட்டேன். இது உண்மை. என் வாழ்வு இருண்டுவிட்டது. ஆனல் என் உடலில் உயிர் உள்ளளவும் உன்னை மறக்கமாட்டேன். பேசப்

பேச என் உள்ளம் பேதலிக்கிறது. நான் வருகிறேன். நீ இன்பமாய் இரு'' என்று அவள் கையைப் பிடித்து தன் கடைசி இதயமுத்தத்தை அளித்துவிட்டு மின்னலைப்போல் மறைந்தான்.

“ராஜா, முடியாது. நீ போக முடியாது. நானும் உன்னுடன் ....'' என்று கூறி நிமிர்ந்தாள். ஆனால் அவன் அங்கிருந்தால்தானே.

* * * *

அந்நாள்முதல் இவ்வூரை வந்தடைந்து இங்கு உபாத்தினியாக இருக்கிறாள் சுகி. மேற்கண்ட நிகழ்ச்சிகளை எண்ணி தன்னை மறந்து சோபாவில்சாய்ந்திருந்த அவளுடைய நினைவை, “அம்மா போஸ்ட்'' என்ற குரல் விழிக்கச் செய்தது. கடிதத்தைப் பிரித்தாள். ஆம் ராஜாவே எழுதியிருந்தான். அதில் “நேற்றுத்தான் இவ்வூருக்கு வந்தேன். நான் தங்கியிருக்கும் வீட்டுக்காரரின் மகள்—உன் வகுப்பில் படிப்பவள் மூலம் தற்செயலாக நீ இங்கிருப்பதை அறிந்தேன். என்னைப்போல் நீயும் திருமணம் செய்துகொண்டிருப்பாய் என்று நம்புகிறேன். எப்படி இருக்கிறது உன் இல்வாழ்க்கை? காதல் ஒரு மின்னல். அது தோன்றி மறையக்கூடியது. அதை நம்பி நாம் வாழ்க்கையை வெறுக்க முடியாது...'' வார்த்தைகள் அவளைக் கலங்கச் செய்தன. அதற்குமேல் வாசிக்கவும் விரும்பவில்லை. யாருக்காக தன்வாழ்க்கையைத் தியாகம் செய்தாளோ அவன் வேறுஒரு பெண்ணுடன் காரில் சென்ற காட்சி அவளைச் சித்திரவதை செய்தன. அன்று முதல் அவள் ஆண்களை வெறுத்தாள். அவள் வாழ்நாள் முழுவதும் தனிமரம்தான். பற்றில்லாக் கொடி. மணமில்லா மலர். நீர்த்துளியில்லா வானம். சுகி என்ற மென் மலரை, ராஜா என்ற வாலிபன் பறித்து அனுபவிக்க முடியாததால், அந்த மலர் பலஇன்னல்களுக்கு இடையில் கருகிவிட்டது. யாருக்கும் உபயோகப்படாமலே அவள் உண்மையிலேயே கருகிய மலர் ஆனாள். ஆனால் அவள் கருகிய மலர் என்று ராஜாவிற்கு எங்கே தெரியப்போகிறது! ★

ஜமீன்தாரில் ராஜம்மா—மாதுரி.

மழையே நீ வருவாய்!

[இ.பச்சையப்பாஇளையபெருமாள்]

மழையே நீ வருவாய்! மனச்
சஞ்சலம் விட் டொழித்து.
உலகோர்க் குணவிலை உன்வர
விலையெனில்
மழையே நீ வருவாய்!

மழையே நீ இரங்காய்! நில
மனிதரின் செயல் மறந்து.
விளையா துலகினர் மயங்குமிவ்
வேளையில்
மழையே நீ இரங்காய்!

எவரே உனைத் தடுத்தார்? எனில்
ஏனவர்க் கிணங்கினையோ?
தவறுணர்ந் துலகினர் தவம்புரி
நிலையினில்
எவரே உனைத் தடுத்தார்?

அறமே வளர்த்திடுவோம்! மறம்
அணுவ ணுவா யொழித்து.
இறைவனின் அனுமதி
ஏற்றுடன் வந்திடு
அறமே வளர்த்திடுவோம்!

மழையே நீ வருவாய்! வழி
வந்துயிர் தந்திடுவாய்.
ஒழுக்கமில் லாரினி ஓய்ந்திடு
வாருயர்
மழையே நீ வருவாய்!

எக்காலத்தும் மாறுதவை
"கோபுர மார்க்"
தீப்பெட்டிகளே!



சைடு மருந்து
தண்ணீருக்குக் கலையாது.
50 டிக்கிரி பாரன் ஹீட்டில்
குச்சிகள் கழிவில்லாமல்
பொருத்தக்கூடியது.

★

The Southern India Match Co.,
SIVAKASI.
Tel:- "SIMCO"

ஆளும் தலைவரே இதற்குப் பதில் கூறட்டும்!

[என். எஸ். ராமன்—மதுரை]

பகல்முழுதும் படாதபாடு பட்டுப் பட்டரையிலே உழைத்திட்டேன்
என்னுடனேனும் இத்தொல்லை தீரட்டும் என்றெண்ணி
என்மகனைப் படிக்க வைத்தேன்.

இன்பமே இல்லாத என்வீட்டில் பிறந்த என்மகன்
சினிமாவிற்குச் செல்லவில்லை சீட்டாடி வீண்பொழுது
போக்கவில்லை பசியும் பட்டினியும் தன்னுடன் வசிக்கும்
தோழர்கள் என்றெண்ணித் தன்படிப்பில் குறையின்றிப்
படித்திட்டான்.

பத்தாவது படித்திட்டால் என்மகனுக்குத்
தக்கதோர் வேலைகிடைத்துத் தன்வாழ்வில்
மிக்கதோர்தொல்லையின்றி நல்வாழ்வு வாழ்வான் என்றெண்ணினேன்

அடுத்து வருகிறது அரசாங்கத் தேர்வுஎன்று விடிந்தவனும்
விடிவதற்கு முன்னும் எழுந்து அகல்விளக்கேற்றி வைத்து
மார்கழிக் குளிரையும் பனியையும் பாராது படித்திட்டான்
படித்ததின்பலன் கிட்டிற்று முந்நூறுக்கு மேற்பட்ட தேர்வு
எண்களுடன் வெற்றி கண்டான் தேர்விலே.

பணக்காரக் குழந்தை எல்லாம் பலமுறை எழுதியும்
காணாத வெற்றியினை என்மகன் ஓரே முறையில் கண்டான்
என்பதை எண்ணியபொழுது உள்ளத்தில் உவகை பொங்கும்
ஆனாலும் இத்தனை எண்கள் எடுத்த என்மகனைக்
கல்லூரியில் படிக்கவைக்க முடியவில்லையே எனநினைந்து
வெம்பினேன் மனம் நொந்தேன் என்செய்வேன் ஏதேனும்
வேலைசெய்து பணம் மீந்துவைத்துப் படிக்கவைப்பேன்
அடுத்தஆண்டென்று
வேலைதேடச் செய்தேன்.

வேலைகேட்டுக் கேட்டுக் கடிதத்தின்மேல் கடிதம் எழுதிக்
கண்டபலன் கைநொந்தது காசுசெலவழிந்தது அதுதவிர
வேறெதுவும் நல்லபதிலினைக் கண்டானில்லை.

வேலைதேடிச் சென்ற இடமெல்லாம் கேட்கின்றார் முன்பணம்
கட்டித்தான் விடுவோமே என்றாலும் வேலைகொடுப்போரை
நெருங்குவதற்குச் சிபார்சு பலவேண்டும்.
என்செய்வேன் யாரைப்போய் அழைத்திடுவேன் சிபாரிசுக்கு
யானும் என்னைச் சேர்ந்தோரும் கொல்லன் பட்டரையைத்தவிர
வேறெந்த நல்ல பதவி வகிக்கின்றார்?
போகட்டும் தனிப்பட்டோர் துணிக்கடையில் வைத்துக்கொள்
என்றாலும் கேட்கின்றார் இந்தி தெரியுமா வென்று.

தமிழ்நாட்டில் இருந்த தமிழர்களுடன் வியாபாரம் செய்ய
தமிழ் போதாதா? இந்திஏன்? என்றுகேட்டால்
யார்கூறுவார் பதில்இதற்கு

வேலைகிடைக்காததால் உயிரிழக்கும் ஈனபுத்தி
படைத்தோன் அல்லன் என்மகன்
வந்திட்டான் யான்செய்யும் பட்டரைக்கே வேலைசெய்ய

என்னுடன் இத்தொல்லை தீரட்டும் என்றெண்ணிய என்முன்
என்மகனும் யான்படும் தொல்லையையே படுவதைக்
கண்டால் என்மனம் நோகாதா?
எனக்குத்தான் அழுகை வராதா? படித்தும் வேலையில்லையா?

ஒன்று மாணவர்கள் அனைவரையும் அரசாங்கத்தின்கீழ்
ஓரே நிலையில் அவரவர் அறிவுக்கேற்ற துறையில்
முன்னேற வழிவகை செய்தல் வேண்டும்.

இல்லை இந்நிலையிலேயே மாணவர்கள் இருந்திட்டால் போதுமா?
ஒவ்வொருவரையும் ஒருஅறிஞன் ஒருவிஞ்ஞானி ஆக
ஆக்கக்கூடாதா?

வருங்கால இந்தியாவின் தூண்கள் இளஞ்சிங்கங்கள்
என்றுகூறும் மாணவர்கள் இந்நிலையில் இருந்திட்டால் போதுமா?
ஆளும் தலைவரே இதற்குப் பதில்கூறட்டும்.

இலங்கை பூராவிற்கும் 'மகிழ்ச்சி'யின் சோல் ஏஜண்டாக நாங்கள் ஏற்றிருக்கிறபடியால் இலங்கையில் சப் ஏஜன்ஸி எடுக்க விரும்புவோர் எங்களுக்கு எழுத வேண்டுகிறோம்.

த. தம்பித்துரை—நியூஸ் ஏஜண்ட்,
நெ, 226, ஆஸ்பத்திரி ரோடு. :: யாழ்ப்பாணம். (சிலோன்)

சரிந்த குடும்பம்

[குமணன்]

அன்று எனக்கு மிகவும்சோம் பலாக இருந்தது. என் மனைவி யும் ஊரில் இல்லை. பிறந்த இல் லத்திற்கு தாய்மைப் பதவி பெற வேண்டிச் சென்றுவிட்டாள். புத்தகத்தைப் பிரித்துப் படித் தேன். என் மனைவியின் முகம் தான் தெரிந்ததேயொழிய எழுத் துக்கள் தெரியவில்லை. அவ்வளவு போதை, இல்லை அன்பு என் மனைவி மீது. சினிமாவிற்குச் செல்லலாமா என நினைத்தேன். காசையும் கொடுத்து தலைவலி யையும் விலைக்கு வாங்க நான் விரும்பவில்லை. அப்படித்தானே இருக்கிறது இன்றைய சினிமாக் களும். புராணப்படங்கள்போய் சமூகப்படங்களாவது வருகிறதே என்று ஓரளவு திருப்தியடைந் தாலும், கானக் குயில்களின் கானங்கள், நடன மயில்களின் நடனங்கள் போன்ற தலைவலிக ளையும் சேர்த்தல்லவா அனுப்பி விடுகிறார்கள். நான் சிந்தனைக் கடலுக்குள் மூழ்கிக்கொண்டே இருக்கும்போது என் நண்பன் பெருமாள்சாமி வந்து என்னைக் காப்பாற்றினான்.

"என்னப்பா, கடவுளைப் பார்க்கணும் என்று தவம் செய் யப் போயிருந்தாயாமே?" என்று கேட்டேன்.

"என்ன சுந்தரம், என்ன சொல்றே?" என்று குழப்பத் தோடு வினவினான்.

"நீண்ட நாளாகக் காணோமே வென்று கேட்டேன். சரி, தெரி யுமா சேதி, உன் சிநேகிதன், அவன்தான் என் தோட்டக்கா ரக் கந்தசாமி வேலையிலிருந்து நின்றுவிட்டான்"

பெருமாள்சாமி ஆச்சரியத்தால் திகைக்கிறான் என்பதை அவன் முகபாவம் எடுத்துக்காட்டியது. கந்தசாமி அநேக வருடங்களாக எங்கள்வீட்டிலே தோட்டவேலை பார்ப்பவன். பெருமாள்சாமிவந் தால், இருவரும் வம்பளந்து கொண்டே இருப்பார்கள். "சரி வா தோட்டத்திற்கு போவோம்" என்று அவன் கையைப்பற்றி இழுத்துக்கொண்டே தோட்டத் திற்குச் சென்றேன்.

தோட்டத்தின் மத்தியிலுள்ள ஓர் மேடையில் புதிய தோட்டக் காரன் நாகப்பன் உட்கார்ந்து கொண்டிருந்தான். தலை குனிந் திருந்தவன் கண்களிலிருந்து நீர் தாரைதாரையாகப்பெருகி வழிந் தோடியது.

"என்ன நாகப்பா! ஏன் அழு கிறாய்?" என்றேன் நான்.

"ஒன்றுமில்லை எஜமான்!" என்று கூறிக்கொண்டே நழுவப் பார்த்தான். நான் கையைப்பற்றிக்கொண்டே "நீ ஏதோமறைக்கிருய். உண்மையைச் சொல், உதவிகள் வேண்டுமானுல் செய்கிறேன்" என்றேன்.

"நான் கவலைப்படுவதற்குக் காரணமான நிகழ்ச்சியைக் கூற வேண்டும் என்கிறீர்கள். கூறுகிறேன்" என்று சொல்லிக்கொண்டே அவன் குடிசைக்குள் சென்றவன் ஒரு படத்தோடு திரும்பினுன். "இது யார் தெரிகிறதா, பாருங்கள்" என்று கூறிக்கொண்டே எங்களிடம் கொடுத்தான்.

இருவரும் படத்தைப் பார்த்தோம். "மோகன குமாரியின் படம். இவள் சினிமா நடிகை" என்ருன் பெருமாள்சாமி.

"ஆம் இவள் சினிமா நடிகை. நாட்டின் தவநடிகையாம். நாட்டிலே கலை விளக்கேற்றும் கலா தேவியாம். காளையர்கள் உள்ளம் ஊசலாடும் வகையில் அங்கம் நெளிப்பவள்தவநடிகை. காரிலே செல்லும் கனவான்களிடம் கண் வலைவீசிக் காசுபறிப்பவள் கலா தேவி—வெட்கம். ஆனுல் இவள் யார் தெரியுமா? கேளுங்கள்!"

* * * *

சுமார் எட்டு ஆண்டுகளுக்கு முன்னுல் நான் தோட்டக்காரனுக இல்லை. சாதாரணக் கூலிக்காரன். தினம் ஒருரூபாய்கூடக் கிடைக்காது. அரைப் பட்டினியாகக் காலம்கடத்தினேன். கல்யாணமாகவில்லை. அன்ெருரு நாள் எனக்கு ஒரு வேலையும் கிடைக்கவில்லை. பசியோ காதை யடைத்தது. பெரிய கடைவீதியிலே வண்டியை இழுத்துக் கொண்டு சென்றேன். ஓர் கடையிலிருந்து என்னைக்கூப்பிட்டார்கள். அதன்பலன் நான் பத்து மூடைகளை ரயிலுக்கு ஏற்றிக் கொண்டுசென்றேன். மடியிலே ஐந்தணு உட்கார்ந்தது. அந்தக் கடை முதலாளி என்னைப்பற்றி விசாரித்தார். நான் திருநெல்வேலியில் பிறந்தவன் என்றும், தாய் தந்தையர்கள் நான் பிறந்த மூன்ரும்ஆண்டிலேயே காலமாகிவிட்டார்கள் என்றும் சொன்னேன். இரக்கமனம் படைத்த முதலாளிகளும் இருக்கத்தான் செய்கிருர்கள். இல்லை என்ருல் அவர் என்னை அவர்கள் கடையில் வேலைபார்க்கச்சொல்வாரா? வெளியிலிருந்து வரும் மூடைகளை அடுக்குவது, விற்கும்மூடைகளை உரியவர்களிடம் கொண்டு சேர்ப்பது என் அன்ருடவேலை. நாள் ஒன்றுக்கு இரண்டுரூபாய் சம்பளம் வாங்கினேன்.

சலனமின்றிச் சென்றது என் வாழ்வு. சலனமின்றியே வாழ்க்கைப்படகு ஓடுமா? ஒருநாள் மல்லம்மாவைச் சந்தித்தேன். மல்லம்மா அடுத்த கடையில் வேலை பார்க்கும் கோவிந்தனின் மகள். தகப்பனுக்குச் சாப்பாடு கொண்டுவரும்நேரங்களில் நான்

அவளைப் பார்ப்பேன். சேற்றிலே செந்தாமரை என்பார்களே அதைப்போலவே இருந்தாள். கூலிக்காரன்மகளானாலும் பார்ப்போரை வசீகரிக்கும் இயற்கைத் தோற்றங்களுடன் விளங்கினாள். இளமைக் கொடியிலே பருவ மலர் அவள். கொடி தழைக்க நான் கொம்பானேன். ஆம், நாங்கள் திருமணம் செய்து கொண்டோம். மீனாக்ஷி சுந்தரேஸ்வரர்சன்னதியில்தான் நான் மல்லம்மாவுக்குதாலிகட்டினேன். "ஒற்றுமையாக வாழுங்கள்" என்று கூறி அர்ச்சிக்கப்பட்ட மாலையை எங்கள்முன் நீட்டினார் கடவுளின் பிரதிநிதிஎன்றுகூறப்படும் பூசாரி. ஆனால் எங்கள் வாழ்வை வளமாக்கக் கடவுள் மறந்துவிட்டார்! அவருக்கு ஏழைகளைப் பார்க்க எங்கேநேரமிருக்கப்போகிறது?

நான் என்மனைவியோடு குடித்தனம் ஆரம்பித்தேன். கொஞ்ச நாள் வாழ்வு அமைதியாகவே நடந்தது. ஆனால் விரைவில் என் உள்ளத்தில் புரட்சிகரமான புயல் வீசியது மல்லம்மாவின் உபதேசத்தால். கூலிக்கார வாழ்வு கசந்தது. அன்று பேரீச்சம்பழமாக இருந்தது இன்று வேப்பங் காயாக மாறிவிட்டது. என் முதலாளி வீட்டிலிருந்த தோட்டக்காரன்விலகிவிட்டான். நான் தோட்டக்காரனாக ஆசைப்பட்டேன். மெதுவாகமுதலாளியிடம்இதைப்பற்றிப்பேசினேன். அவரும் மறுமொழி சொல்லவில்லை. கூலிக்காரனாக இருந்தவன் தோட்டக்காரனானேன். இதில் அதிகமாகப் பெருமைப்பட்டவள் மல்லம்மாதான். பூனையும், புலியும் சாயலில் ஒத்து இருந்தாலும் புலிக்கிருக்கும்வீரமும்தைரியமும் பூனைக்கில்லையே! அதைப்போலவே நான் இருந்தேன். இந்த வேலையும் அதிக நாள் நீடிக்காது என்பதை அப்போது நான் அறியவில்லை

நான் என்னால் முடிந்தவரை திறமையாகத்தான் நிர்வகித்துவந்தேன். என் முதலாளி தோட்ட விஷயங்களில் அதிகம் தலையிடமாட்டார். அவர் இரண்டாம் மனைவி இளம்பிராயமுள்ளவர். பிரேமாஎன்பது அவர்கள்பெயர். எப்பொழுதும் தோட்டத்திலே தான் இருப்பார். புதிய புதிய மலர்கள் உற்பத்தி செய்வதில் அக்கறை காட்டினார். தனக்குக் குழந்தைகளில்லாததால் மலர்கள் மேல் தனக்கு உயிர்என்று கூறுவார். அப்படிக் கூறும்போது என்னையே உற்றுப் பார்ப்பார். ஆயிரம் அர்த்தங்கள் பொதிந்திருக்கும்அப்பார்வையில். நான் அதை விகற்பமாக எடுக்கவில்லை.

ஒருநாள் முதலாளி எங்கோ ஊருக்குச் சென்றுவிட்டார். நான் தோட்டத்தில் மண்ணைக் கொத்திவீசி அப்பால் போட்டுக் கொண்டிருந்தேன். பிரேமா எஜமானிவந்துகொண்டிருந்ததை நான் பார்க்கவில்லை. அவர்கள்

மேல் மண் விழுந்துவிட்டது. முகம் புடவை எல்லாம் மண். "ஏய் நாகப்பா! என்ன இது, உடனே வீட்டிற்கு வா சொல்கிறேன்' என்று கோபத்தோடு இரைந்துவிட்டுச் சென்றுவிட்டார்கள். எனக்குப் பகீரென்றது. கைகால்கள் உதறலெடுத்தது. என்ன நேருமோ என அஞ்சியவாறு அவர் அறைக்குச் சென்றேன் "என்ன நாகப்பா! இப்படியா மண்ணைப்போடுவது, கண்ணெல்லாம்மண். கொஞ்சம் கண்ணை ஊதிவிடு" என்று எஜமானி சொன்னார். இல்லையில்லை கட்டளையிட்டார்.

என் மனதின் ஓர் மூலையில் சந்தேகம் தோன்றியது; ஆனாலும் எஜமானி கட்டளையிடுகிறாரே. கண்ணை ஊதுவதற்காக பக்கத்திலே சென்றேன். அப்பொழுது அவர்நடந்துகொண்ட முறை எனக்குப் பிடிக்கவில்லை. உண்ட வீட்டில் துரோகமா? புத்திமதிகள் பல சொன்னேன், கேட்டாளில்லை. எனக்கு வந்த கோபத்தில் அவள் பிடியினின்று விடுபட்டு வேகமாக குடிசைக்கு வந்துவிட்டேன்.

மறுநாட்காலை எஜமான்கோபமாக குடிசைக்குள்ளே வந்தார். வந்தவர் ஒன்றும் பேசாமல் என் கன்னத்திலே நான்கைந்து அறைகள் விட்டு "அற்ப நாயே! பாம்புக்குப் பால் வார்த்த கதையாகிவிட்டது உன் செய்கை. நட வெளியே!" என்று இரைந்தார். எனக்கு விஷயங்கள் பளீரென விளங்கிவிட்டது. முதல் நாள் சம்பவங்கள் மாற்றிக் கூறப்பட்டிருக்கிறதுபிரேமாவால். மவுனமாக மல்லம்மாவைக் கூட்டிக் கொண்டு வெளியேறினேன்.

வேலைக்காகப் பல இடங்களில் அலைந்தேன். முடிவில் சினிமா படம் எடுப்பவர் ஒருவரின் வீட்டிலே வேலைகிடைத்தது. தோட்டவேலைதான். என்எஜமானுக்கு மனைவியில்லை. இங்குதான்நான் அதிகநாள் நீடித்து வேலை பார்த்தேன். வருடங்கள் ஓடின.

வீட்டுத் தோட்டவேலை மட்டுமில்லை, முதலாளியின்ஸ்டூடியோ தோட்டத்திலும் நான் பங்கு கொண்டேன். நான் வந்தபிறகுதான் ஸ்டூடியோ தோட்டம் நன்றாகஇருக்கிறது என்று முதலாளியும், டைரக்டரும் சொன்னார்கள். அன்று தோட்டத்திலே படம் பிடிக்க ஏற்பாடாயிற்று. நானும் ஸ்டூடியோவில் தங்கிவிட்டேன். அன்றுதான் படமெடுக்கும் விதத்தை பூர்ணமாக அறிய சந்தர்ப்பம் கிட்டியது.

வீட்டிற்கு நான் திரும்பும்போது மணி இரண்டிருக்கும். வீட்டிற்குள் யாரோ பேசும்சப்தம் கேட்டது. திடுக்கிட்டுநின்று கவனித்தேன். முதலாளியும், மல்லம்மாவும்தான் பேசிக்கொண்டிருந்தார்கள். "அடுத்த வருடம் நீ பெரிய ஸ்டார் தெரியுமா?" என்றார் முதலாளி. என் இரத்தம் கொதித்தது. உள்ளே

நுழைந்தேன். "மல்லம்மா! என்ன காரியம் செய்யத் துணிந்தாய்?" என்று கத்தினேன்.

"என் மனதிற்குச் சரியென்று பட்டதைத்தான் செய்தேன். அதிகமாகப் பேச வேண்டாம்" என்ருள் சற்றும் பயமின்றி என் மனைவி மல்லம்மா:

"என்ன மல்லம்மா! நீயா இப்படிப் பேசுகிருய்? அன்று அந்த வீட்டிலிருந்து விலகிய காரணம் உனக்குத் தெரியுமே! கொண்டவளின் மனம் கருகக் கூடாது, துரோகம் செய்யக் கூடாது என்ற கொள்கைக்காகத் தானே நான் அடிபட்டேன்! அதற்குப்பிரதியுபகாரமாஇது?" என ஆத்திரத்தோடுகேட்டேன்.

"நீ அப்படி நினைத்தாய். ஆனல் நான் அப்படி நினைக்க வில்லை. 'காற்றுள்ளபோதேதூற்றிக்கொள்' என்ற கொள்கை யுடையவள். தோட்டக்காரன் மனைவியாய் நான் கண்ட பலன் என்ன? சுகம் என்ன? ஆகையால் நான் சினிமா நடிகையாகத் தீர்மானித்துவிட்டேன். என் படங்கள் பலவேடங்களில், பல கலர்களில் சுவர்களில் ஒட்டி இருப்பதைப் பார்த்து பெருமை யடையவே விரும்புகிறேன்" என்று பிரசங்கம் செய்துவிட்டு முதலாளியின் கையைப் பற்றிக் கொண்டு குடிசையை விட்டு பங்களாவை நோக்கி நடந்தாள்.

மல்லம்மாவின் மனமாறுதலுக்குக் காரணம் என்முதலாளியின் சூழ்ச்சிநிறைந்த ஆசைவார்த்தை. என் உள்ளத்தில் எழுந்த ஆவேசத்தின் எதிரொலி என் உடலில் முறுக்கேறியது. பழிவாங்கும் எண்ணம் என் இதயத்திலெழுந்தது. வேகமாக ஓடிச் சென்று என் முதலாளியின் முகத்திலே ஒருகுத்துவிட்டேன். நிலைதடுமாறினர். தன்னிலையூட்டினுள் மல்லம்மா. இதற்குள் காவல் ஆள் வேறு வந்துவிட்டான். நான்ஒருவன் நன்ருகத் தாக்கப்பட்டேன். செயலிழந்து கீழே விழுந்தேன். மீண்டும் நினைவுற்றபோது என் உள்ளம் எரிமலையாய்க் குமுறியது. சற்று நிதானித்துச் சிந்தித்தேன். என் மனம் மாறியது. உடனே அங்கிருந்து வெளியேறினேன்.

மல்லம்மா மோகனகுமாரியானுள். குமாரி மஹால், „கார், குமாரி பிக்சர்ஸ் இவைகளெல்லாம் அவள் புகழேணியின் உச்சியிலே நிற்கிருள் என்று பறைசாற்றும்சின்னங்களாகிவிட்டன. என் உள்ளம் என்றே செத்துவிட்டது. உடலும் கண்ணீராக உருகிச் சாகிறது. "நிலத்திருப்பவைசெழிப்பதுபோல் பிடுங்கிப் பிடுங்கிநட்டமரமும், பெயர்ந்து பெயர்ந்து சென்ற குடும்பமும் தழைப்பதில்லை" என்றபடி என் வாழ்க்கைநாசமடைந்துவிட்டது அதைஎண்ணித்தான் அழுதேன்.

* * * *

"என்ன மோகனகுமாரி உன் மனைவியா?" இருவரும் ஆச்சரியத்தால்ஏககாலத்தில்கேட்டோம்

"ஆம் என் மனைவி தான்! சொல்லவும் நா கூசுகிறது. அவள்தான் உன் மனைவியாயிற்றே இன்றுள்ள நிலையில் அவளிடம் சென்றால் கணவன் என்ற பதவியில் பெருமையுடன் வாழ் நாளைக் கஷ்டமின்றிக் கழிக்கலாமே என்று நீங்கள் கேட்கலாம்; மானத்தைக் காற்றிலே விட்டு, உடலை அடகுவைத்துச் சேர்த்த பணத்தில் நான் வயிறு கழுவவா? அதைவிட தற்கொலை செய்துகொள்வேன்" என்று கூறி நாகப்பன் விசித்துவிசித்து அழுதான்.

"அழாதே நாகப்பா! பெயர்ந்து சென்றதால் உன் குடும்பம் நாசமாகவில்லை. மல்லம்மா மனம் மாறக் காரணம் சினிமா; அதில் நடிகைகளுக்குக் கிடைக்கும் கை நிறைந்த காசு. இன்றையச் சினிமாக்களினால் அநேகரின் உள்ளம் மாறுதலடைகிறது. நாட்டிலே நல்லுணர்வையும், ஒழுக்கத்தையும்நிலைநாட்ட பங்குகொள்ளவேண்டிய சினிமா உலகம், இன்று கீழ்த்தரமான உணர்வுகளுக்கு விதையிடுபவைகளாகத்தான் அமைகின்றன. நம் சமுதாயம் சீர்திருந்த சினிமாக்களும் தங்கள் நிலையை மாற்றிக்கொள்ள வேண்டும்" என்று அவனைத்தேற்றிவிட்டு வெளியே உலாவச் சென்றோம். பார்த்தோர்மனம் ஊசலாடும்வகையில் மோகனகுமாரி காட்சியளிக்கும் சினிமா விளம்பரம் ஒன்று சுவரிலே காட்சியளித்தது.

★

சத்திய வேதமாகிய
பைபிளை ஆழ்ந்து படிக்க
வேத மாணாக்கர் ஐக்கிய
சங்கத்தாரால் தமிழில்
வெளியிடப்பட்டிருக்கும்
வேதோபதேசவினாவிடை
என்ற புஸ்தகம்
கிடைக்கும்.

விலை: சாதா பைண்டிங்
ரூ. 0—12—0
அட்டைப் பைண்டிங்
ரூ. 0—14—0
தபால் சார்ஜ் வேறு

"எட்வர்ட் காபி ஒர்க்ஸ்"
காளியம்மன் கோவில் தெரு, விருதுநகர்.

இந்நாட்டு மன்னன்!

[பாரி—கரூர்]

உயர்நிலைப் பள்ளியின் ஆரம்ப மணியடிக்கப்பட்டது. பள்ளியின்முன் மிட்டாய், மாங்காய் வாங்கித் தின்றுகொண்டிருந்தவர்களும், பெட்டிக் கடையில் சிகரெட், பீடி குடித்துக்கொண்டிருந்தவர்களும், தாழ்வாரத்தில் தனித் தனியாகவும் கூட்டம் கூட்டமாகவும் நின்று அரட்டையடித்துக் கொண்டிருந்தவர்களுமான மாணவர்கள் எல்லோரும் அவரவர்களின் வகுப்பிற்குச் சென்று அமர்ந்தார்கள்.

இரண்டாவதுமணியடித்ததும் ஆசிரியர் பாடத்தைநடத்த ஆரம்பித்தார். பையன்கள் பாடத்தை நன்ருகக்கவனித்து, குறிப்பெழுதிக்கொண்டுஇருந்தனர். ஆனல் 'மணி' மாத்திரம் குறிப்பெழுதாமல் அசையாது அமர்ந்திருந்தான். இதைக் கண்ட ஆசிரியர் "ஏண்டா மணி, உன் உடல்தான் இங்கு இருக்கிறது; ஞாபகம் எல்லாம் எங்கோ வெளி உலகில் உலாவுகிறதுபோலதெரிகிறதே!" என்ருர். பயத்துடன் எழுந்த மணி "ஆமாங்க சார், நான் இங்கு உட்கார்ந்திருந்தாலும் எனது மனம் எதை எதையோ நினைத்து எங்கு எங்கோ செல்கிறது. இதற்குக்காரணம் எனது சூழ்நிலைதான் சார். எனது தாய் 6 மாதங்களாக வலிமை இழந்து படுத்த படுக்கையாக உயிருக்காகப் போர் செய்துகொண்டிருந்தாள். வைத்தியரின் உதவியால் பிணி சற்று நீங்கிற்று. ஆனல் உடம்பு தசையற்ற எலும்புக் கூடாகிவிட்டது. இனி உடல் உரம்பெறுவதற்குவேண்டியசாப்பாடு கொடுக்கவேண்டும். எப்படிக் கொடுக்கமுடியும்? கடையில் குமாஸ்தாவாக இருந்து, மாதம் நாற்பது ரூபாய் சம்பாதித்த எனது தந்தையை, பிறர் உழைப்பின் ஊதியத்தைக் கொண்டு உண்டுஉறங்கிவாழ்ந்து வரும் மனஇரக்கமற்ற முதலாளி சிறு குற்றத்திற்காக கடையை விட்டே நிறுத்திவிட்டார்"

"ஏய்நிறுத்தடா; என்னஇது, மேடைஎன்று நினைத்துக்கொண்டாயா? எங்கேயோ செய்ய வேண்டிய பிரசங்கத்தை வகுப்பில்செய்யஆரம்பித்துவிட்டாயே சரி, நேற்று ஹிந்தி வகுப்பில் தூங்கிஞயாமே?" என்ருர் கோபமாக ஆசிரியர்.

"தூங்கவில்லை சார்! நேற்று காலையில் சாப்பிடாமல்பள்ளிக்கு வந்தேன். முந்தாநாள் இரவும் சாப்பிடவில்லை. அதனல் மயக்கமாக இருந்தது. கண்ணைமூடிக் கொண்டிருந்தேன். அவ்வளவு தான் சார்"

"சரிசரி, போதும் உன்குடும்ப புராணம். நான்காவது பாடத்தைப் படி, பார்க்கலாம்." அப்பொழுது மணி பக்கத்துப்பையனிடம் புத்தகத்தை வாங்கினான். அதைக் கண்ட ஆசிரியர் "உன்னுடைய புத்தகம் எங்கேடா?" என்றார்.

"புத்தகம் வாங்கவில்லை சார். அடுத்த வாரத்துக்குள் எப்படியும் வாங்கிக்கொள்ளுகிறேன்" என்று பரிதாபத்துடன் கூறினான்

"உன்னைப்போன்ற தடியன்களுக்கும், சோம்பேறிகளுக்கும் புத்தகம்இல்லாமல் இங்கு இடம் இல்லை. போ வெளியே! புத்தகம் இல்லாமல் உள்ளே வரக்கூடாது"என்று வெளியே விரட்டிவிட்டார் மணியை, ஆசிரியர்.

கண்ணில் நீர்வடிய, இருதயம் வேகமாக வேலைசெய்ய மணி வகுப்பைவிட்டுவெளியேறிபார்க்கிற்குச் சென்று, பசிக்கலக்கத்துடன் படுத்துக்கொண்டு, கையில் காசு இல்லாது விழிக்கும் தந்தையையும், படுக்கையில்கிடக்கும் தாயையும், பள்ளி ஆசிரியரின் செயலையும், இனி என்ன செய்வது என்பவைகளைப்பற்றியும்யோசித்துக்கொண்டிருந்தான்

கண்கள்சிவந்திருந்தன. உடல் சூடு ஏறிக்கொண்டே சென்றது. இருதயம் வெடித்துவிடும்போல் தோன்றியது. மெதுவாக மணி எழுந்து உட்கார்ந்தான். அப்பொழுது அண்டைவீட்டு அருணாசலம்ஓடிவந்து "மணி உனது தாயின் உடல்நிலை மிகவும்மோசமாகி உயிர் போகும் தருவாயில் இருக்கிறாள். உன்னை அழைக்கிறாள்" என்றான்.

"ஆ! அம்மா! அம்மா!" என்று கூவிக்கொண்டே மாணவமணி—இந்நாட்டு மன்னன்—மனவேதனையுடன் ஓடினான்; ஓடினான். ஓடிக்கொண்டேயிருக்கிறான்.

"பொச்சாப்புக் கொல்லும்
புகழை; அறிவினை
நிச்சநிரப்புக்(கு)ஒன்(று)
ஆங்கு" (குறள்)

[கருத்து: நித்திய வறுமையானது அறிவைக் கெடுக்கும் விதம்போல, ஒருவன்கீர்த்தியை அவன் மறதியானது கெடுக்கும்]

மழையின் ஜனநாயகம்!

நாடகச் செலவிற்கு நன்கொடை கொடுத்தவர்கள் மழையை எதிர்பார்க்கிறார்கள். நாடகம் பார்க்க வருகிறவர்கள் மழை பெய்தால் நாடகம் எப்படி நடைபெறும்? நாம் எப்படிப் பார்ப்பது என்று கவலைப்படுகிறார்கள். நடிகர்களோ மழை பெய்துவிட்டால் நம் பிழைப்புப் போச்சே என்று கருதுகிறார்கள். இந்நிலையில் தினமும் மேகம்கூடி, மழையாகப் பூமியை அடைவதற்குள் ஆவியாகப் போய்விடுகிறது, ஜனநாயக முறைப்படி—பெரும்பான்மையோரின் எண்ணப்படி.

[சமீபத்தில் வெளிவரும் தமிழ்ப்படங்களின் தரத்தை அளந்துகூறும் பொறுப்பை இனி மகிழ்ச்சி நேயர்களுக்கே விட்டுவிட முடிவு செய்துவிட்டோம். சுருக்கமாக, உண்மையை மறைக்காது எழுதி அனுப்பும் நேயர்களின் விமர்சனத்தில் சிறந்ததைப் பிரசுரிக்கப்படும். [ஆசிரியர்]

திரைப்பட விமர்சனம்

ஆன் (கௌரவம்)

'சண்டிநாத்' மதுரை

கதைச் சுருக்கம்: ஜெய்திலக் (திலீப்குமார்) ஒரு ஏழை உழவன். ஹாடாக்களின் பரம்பரையிலே உதித்தவன். மங்களா (நிம்மி)வை மணக்க வேண்டிய முறையுள்ளவன். அன்று மன்னரின் பிறந்தநாள் வைபவம். மன்னரின் சகோதரன் ஷம்ஷேர் சிங் (பிரேம்நாத்) வாள் பலத்திலே நம்பிக்கை கொண்டவன். அவனுடைய சகோதரி ராஜ்பா (நாதிரா) தன்குதிரையை அடக்குபவருக்கு ஆயிரம் மொஹராக்கள் இனும் தருவதாக பறைசாட்டுகிறாள். ஜெய்திலக் அதில் வெற்றியடைவதுடன் ராஜ்பாவிடம் தன்மனதையும் பறிகொடுக்கிறான். இதற்கிடையில் மன்னர் வெளியூர் சென்றுவர நேரிட்டதால் ஆட்சிப் பொறுப்பை மக்களிடம் ஒப்புவிக்கப் போவதாகக் கூறுகிறார். ஷம்ஷேர் பொறுமையுற்று அரசரைக் கொல்ல சதித்திட்டம் போடுகிறான். உண்மை ஊழியன் ஒருவன் தன் உயிரைத் தானம் செய்து அரசனைக் காப்பாற்றுகிறான். மன்னர் மாற்றுருவில் நடமாடுகிறார். மங்களாவைத் தந்திரமாகச் சிறைப்படுத்தி கற்பழிக்க முயலுகிறான் ஷம்ஷேர். மானத்திற்காக உயிரையே அர்ப்பணம் செய்கிறாள் மங்களா. ஜெய்திலக்கின் கட்டாரி ஷம்ஷேரைப் பதம் பார்க்கிறது. ஆக்திரமுற்ற ராஜ்பா ஹாடாக்களின் பரம்பரையையே வேருடனழிக்கத் திட்டமிட்டுச் செல்கிறாள் அங்கு அவள்மனம் மாறுவதுடன் ஜெய்திலக் அவளுடைய மணவாளனாகிறான். ஷம்ஷேர் திடீரென்று அங்கு தோன்றி எல்லோரையும் கைது செய்கிறான். எதிர்பாராதவிதமாக ராஜ்பாவும் ஜெய்திலக்கும் தப்பிவிடுகின்றனர். ஷம்ஷேர் மகுடம்புனையும் நாள். மன்னர் தோன்றுகிறார். மடிகிறான் ஷம்ஷேர். மக்கள் ஆட்சி நிலை பெறுகிறது.

பொதுவாக: அதிக பொருட் செலவுசெய்து இன்றுவரை எப்

படத்திலும் கண்டிராத காட்சி ஜோடணைகளுடன் உலகிலே இரண்டாவது வசூல்பெற்ற 'சந்திரலேகா'வை தென்னாடு அளித்தது. இந்தியக் கலையுலகிலேயே பொன்எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய சம்பவம். அதை அடிப்படையாக வைத்து மெஹ்பூப் அவர்கள் ஐம்பது லக்ஷரூபாய் செலவில் 'ஆன'த் தயாரித்து சந்திரலேகாவைப் போல் பிரமாதமாக இல்லாவிட்டாலும் கூடியவரை தன் 'கௌரவத்தை' காப்பாற்றியிருக்கிறார். கதையில் சித்தரிக்கப்படும் சம்பவங்கள் 20ம் நூற்றாண்டைக்காட்டுகிறது. சான்று படத்தில்வரும் 'கேடிலாக்'கார்தான். இங்கிலையில் குதிரைப் படைகள் படத்திற்கு அவசியமில்லை. படத்தில் வரும் சம்பவங்களில் பெரும்பாலும் ஏற்கனவே வெளிவந்துள்ள மர்மயோகி, சந்திரலேகா, Ten tall men என்றபடங்களிலுள்ள சம்பவங்களை நினைவுறுத்துகிறது. கட்டாரியால் தாக்குண்ட ஷம்ஷேர் அபாயகரமான நிலையில் இருந்து மீளுவதை விவரமாக சித்தரித்து இருக்க வேண்டும். வர்ணங்கள்மிளிர்வதற்காககதைக்குத் தேவையில்லாத பலசம்பவங்கள் புகுத்தப்பட்டிருக்கின்றன.

வசனம்: பொதுவுடைமைக் கருத்துக்கள் உருத் தெரியாமல் தாண்டவமாடுகின்றன.

சங்கீதம்: நௌஷாத்தின் இசையமைப்பு இப்படத்தில் ஜீவனற்று காணப்படுகிறது. பழைய பாடல்களின் மெட்டுகளையே சற்று மாற்றி அமைத்திருக்கிறார். பின்னணி இசை நன்றாக உள்ளது. பின்னணிப்பாட்டு இங்குள்ள ஜிக்கியோ, ரத்னமோ பாடியிருந்தால் கேட்பதற்கு நன்றாயிருந்திருக்கும்.

படப்பிடிப்பும், ஒலிப்பதிவும்: பெர்டுன் டி. இரானி தன் திறமையை நன்குகாட்டி நம்பாராட்டுதல்களைப் பெற்றுக்கொண்டு போகிறார். ஒலிப்பதிவும் அப்படியேதான்.

நடிப்பு: ஜெய்திலக்காக நடிக்கும் திலீப்குமார் கம்பீரமாகக் காட்சியளிக்காவிட்டாலும் நன்றாக நடிக்கிறார். பிரேம்நாத் நடிப்பு பிரமாதமாக எதிர்பார்த்த அளவு இல்லை. ஜேம்ஸ்ஹாக்னி, டக்ளஸ் ஆகியோரின் நடிப்பை பின்பற்றுகிறார். நடிகைகளில் நிம்மி சில கட்டங்களில் மிகைப்பட நடித்தாலும் கூடியவரை நன்றாக நடிக்கிறார். புதுமுகம் நாதிரா பரவாயில்லை.

டைரக்ஷன்: படத்தின் தரத்திற்காக அரும்பாடு பட்டிருக்கிறார் மெஹ்பூப். அவருடைய முயற்சியை விழலுக்கிறைத்த நீராக்கிவிட்டது கதை. மேலும் சவுக்காலடியுண்ட ஜெய்திலக் பாடுவது விரும்பத்தகாத சம்பவம் என்பதை டைரக்டர் உணர வேண்டும்.

★

ஞாபக சோதனைப் போட்டி 5 முடிவு

சரியான விடை

1 புயல்
2 சிவகவி
3 கனகாங்கி
4 அம்பிகாதேவி
5 பால்ய விவாகம்
6 பக்த கபீர்தாஸ்
7 மிஸ்டர் அம்மாஞ்சி
8 வாசவதத்தா
9 ஜெயபாரதி
10 தேவதாஸி

இப்போட்டிக்கு எவருமே சரியான விடை அனுப்பாததால் போட்டி ஆசிரியரின் தீர்ப்புப்படி கீழ்க்கண்டவர்களுக்கு பரிசுத் தொகை ரூ. 10ம் பிரித்துக்கொடுக்கப்பட்டிருக்கிறது.

முதற் பரிசு (2 தப்புள்ள விடை) ரூ. **2—8—0**

R. சேர்மத்துரை, பிட்டல் ஷாப், எழாயிரம்பண்ணை.
(இராமநாதபுரம் ஜில்லா)

2வது பரிசு (3 தப்புள்ள விடை) ரூ. **7—8—0**
தலைக்கு ரூ. 1—4—0 வீதம்

1 M. கிருஷ்ணம்மாள், A. V. A. காம்பவுண்டு, இராஜபாளையம்.

2 ஐ. பழனிச்சாமி, மனோன்மணி விலாஸ் ஹோட்டல், பள்ளபட்டி P. O. (மதுரை ஜில்லா)

3 ஜீவரத்தினம், 8/3, சாயக்காரர் தெரு, விருதுநகர்.

4 P. நடராஜன், IV Form B. S. S. B. ஹைஸ்கூல், இராஜபாளையம்.

5 ச. இஞ்ஞாசிமுத்து, 9/36 ஆர். ஸி. வடக்குத்தெரு, சாத்தூர்.

6 P. ராஜமாணிக்கம்மாள், 299, நாயக்கமார் தெரு, விருதுநகர்.

...EMARA PUBLIC L... 26 MAY 1955

ஞாபக சோதனைப் போட்டி

[கட்டணம் கிடையாது]

முழுவதும் சரியான விடைக்கு

பரிசு ரூ. 10

ஒன்றுக்கு மேற்பட்டவர் சரியான விடை எழுதி அனுப்பினால் பரிசுத் தொகை சமமாகப் பிரித்துக்கொடுக்கப்படும்

வெற்றி பெற்றவர்கள் ஜாபிதாவும் சரியான விடையும் அடுத்த இதழில் பிரசுரிக்கப்படும்

1	கு — —
2	— — — ணி
3	சக் — — —
4	— — ம — — தி
5	கிருஷ்ண — — —
6	— — — யோகி
7	— — — ப் பெண்
8	— — த — — வன்
9	— க்ஷ — — ஞ —
10	— — — — விஜயம்

பெயர்...

விலாசம்...

ஊர்.. ஜில்லா.......................................

போட்டி நிபந்தனைகள்

1 கட்டத்திலுள்ள கோடிட்ட இடங்களைப் பூர்த்திசெய்தால் இதுவரை வெளிவந்துள்ள தமிழ்ப் படங்களின் பெயர்கள் வரும்.

2 மேற்கண்ட கூப்பனை மையினால் பூர்த்தி செய்து, கவரில் வைத்து, "ஆசிரியர், ஞாபக சோதனைப் போட்டி, மகிழ்ச்சி இல்லம், விருதுநகர்" என்று எழுதி 30—9—52க்குள் அனுப்பப்படவேண்டும். உள்ளூர் வாசிகள் நேரில் கொண்டுவந்து கொடுக்கலாம்.

3 முதல் கூப்பன் அச்சுக் கூப்பனிலும், அதன்பின் தனித் தாளிலும், எத்தனை கூப்பன்கள் வேண்டுமானாலும் ஒருவர் எழுதியனுப்பலாம். ஆனால் 100 கூப்பன்களுக்கு ஒரு அச்சுக்கூப்பன் வீதம் எழுதப்படவேண்டும்.

4 எவருமே சரியானவிடை அனுப்பாவிடில், போட்டி ஆசிரியரின் தீர்ப்புப்படி பரிசுத் தொகை பிரித்துக்கொடுக்கப்படும்.

சினிமாச் செய்திகள்

பெல்.

சந்திரஹாரம்

விஜயா புரொடக்ஷன்ஸார் தங்களது அடுத்த தயாரிப்பான சந்திரஹாரத்தை வெகுவேகமாகத்தயாரித்துவருகின்றனர். இதுவரையும் எந்தப் படத்திலும் பார்த்திராதமுறையில் பிரமாண்டமான செட்டிங்குகள் போடப்பட்டிருக்கின்றன. என்.டி.ராமராவ், எஸ்.வி.ரங்காராவ், ஸ்ரீரஞ்சினி, ரேலங்கி நடிக்கும் இப்படத்தை காமேஸ்வரராவ் டைரக்ட் செய்துவருகிறார்.

அழகி

ஜுபிடர்ஸ் தங்களது சொந்தத் தயாரிப்பான அழகிக்கு மெருகு கொடுத்துக்கொண்டிருக்கின்றனர். இப்படம் புதுமுறையானதொரு நாவல்கதை. இதில் எஸ். ஏ. நடராஜன், கிருஷ்ணவேணி, வி. கே. ராமசாமி நடிக்கின்றனர். சுந்தர்ராவ் நட்கர்னி டைரக்ட் செய்கிறார். ஜுபிடர்ஸார்—மேகலா கூட்டுத் தயாரிப்பான "நாம்" கருணாநிதிவசனத்துடன், எம்.ஜி. ராமச்சந்திரன், சக்ரபாணி, வி. என். ஜானகி, நம்பியார், பி. கே. சரஸ்வதி முதலியோரைக்கொண்டு துரிதமாக வளர்ந்துவருகிறது.

ரோஹினி

நடிகை மாதுரிதேவியின்சொந்தப்படமான ரோஹினி தமிழ் & தெலுங்கு இரு பாஷைகளிலும் தயாரிக்கப்பட்டு வருகிறது. மாதுரிதேவியுடன் ஜி. வரலக்ஷ்மி எஸ். ஏ. நடராஜன், எஸ். வி. சகஸ்ரநாமம் நடிக்கின்றனர். ஜி ராமச்சந்திரன் டைரக்ஷன் & சங்கீதடைரக்ஷன் ஆகியஇரு பொறுப்புகளையுமேற்றிருக்கிறார்

பராசக்தி

நேஷனல் பிக்சர்ஸார் தங்களது முதல் தயாரிப்பான பராசக்தியை தீபாவளி தினத்தன்று திரையிட முடிவு செய்துவிட்டனர். ஏற்கனவே நாடக மூலம் ரசிகர்களின் உள்ளத்தைக்கவர்ந்த இந்த அரியதொரு சித்திரம், ஏவி. எம். ஸ்டுடியோவில், மு. கருணாநிதி வசனத்துடன் தயாரிக்கப்பட்டிருக்கிறது என்றால் படத்தின் வெற்றியைப் பற்றிச் சொல்லவாவேண்டும்.

வளையாபதி

மாடர்ன் தியேட்டர்ஸார் தங்களது வளையாபதியை தீபாவளி தினத்தன்று ரசிகர்கள்முன்னிலையில்கொண்டுவர ஏற்பாடுசெய்து

விட்டனர். ஐம்பெருங் காப்பியங்களில் ஒன்றான வளையாபதி ஜானகி, முத்துகிருஷ்ணன் முதலியோரது ஒத்துழைப்புடன் நல்லதொருபெயர் சம்பாதிக்கும் என்பது நிச்சயம்.

ஏழை உழவன்

ராஜராஜேஸ்வரி பிலிம் கம்பெனியார் தயாரித்த இந்த புதியதொரு சித்திரம் ஜெமினி ரிலீஸாக தீபாவளி தினத்தன்று வெளியிட முடிவு செய்து விட்டனர். இதில் இதன் ப்ரடியூஸரான கண்ணாம்பா, அஞ்சலி ரேலங்கி, சி. வி. வி. பந்துலு முதலியோர் நடிக்க, கே.பி. நாகபூஷணம் டைரக்ட் செய்திருக்கிறார்.

புதுக் கம்பெனி

பிரபல பின்னணி பாடகர் கண்டசாலாவும், காமிராமேன் கமால்கோஷும் சேர்ந்து புதியதொரு புரடக்ஷன் கம்பெனி ஆரம்பித்திருக்கின்றனர். இவர்களது முதல்படத்தில் முக்கமாலா, ஜி. வரலக்ஷ்மி நடிக்கின்றனர்.

செந்தமிழ் நாட்டுச் சிறுவர்களுக்கு
திடகாத்திரமளிக்கும்
சிறந்த உணவு எங்கள்

ராஜா பார்லி பிஸ்கட்
ராஜா குளுகோ பிஸ்கட்
ராஜா ஜிஞ்சர்நட் பிஸ்கட்

ஸ்தாபிதம்: 1926

ராஜா பிஸ்கட் கம்பெனி,

***115,* திண்டுக்கல் ரோடு, மதுரை.**

உரிமையாளர்: ஆ. சங்குபிள்ளை.

கிளை: 2, டவுன்ஹால் ரோடு, காலேஜ் ஹவுஸ்,
L. V. ஷண்முகம் பிள்ளை மதுரை.

லைன், கலர், ஆப்டோன்

பிளாக்குகள்

சினிமா சிலைடுகள்
ரப்பர் ஸ்டாம்புகள்
செய்யுமிடம்

ராஜன் & கோ., சிவகாசி.

★ "மகிழ்ச்சி" ★

சீர்திருத்த மாத இதழ்.

ஆண்டுச் சந்தா (தபாலில்) ரூ. 2—4—0

தனி இதழ் ரூ. 0—3—0

மகிழ்ச்சி இல்லம், விருதுநகர்.

மகிழ்ச்சி ஆசிரியர் நா. சதானந்தம் எழுதிய கருத்து நிறைந்த மூன்று புத்தகங்கள்.

விலை 0—8—0

விலை 0—4—0

விலை 0—8—0

மூன்று புத்தகங்களும் வாங்குபவர்களுக்கு தபால் செலவு இனம்.
V. P. P. கிடையாது. வியாபாரிகளுக்கு கழிவு உண்டு.

மகிழ்ச்சி இல்லம், விருதுநகர்.

ஆசிரியரும், அச்சிட்டு வெளியிடுபவரும் நா. சதானந்தம்,
சதானந்தா அச்சகம், விருதுநகர்.